பக்கங்கள் : இருபத்து நான்கு

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

Valampurii

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 05 வெள்ளிக்கிழமை (19.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 183

moving money for better
உலகெங்குமுள்ள நாடுகள்
உறவுகளுக்கு தரித தாமல்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-9717)

யாழில் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளது

யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி ருவான் வணிகசூரிய

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்புப் படையினரால் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட பொதுமக்களின் காணிகள் இராணுவத் தினரால் விடுவிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் 23

இந்தியாவிலிருந்து வருகை தந்தால் 021 222 6666 தெரியப்படுத்துக

வடக்கு மக்களுக்கு முக்கிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

இந்தியவிலிருந்து யாராவது வருகை தந்தால் 021 222 6666 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துமாறு வடக்கு மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா தொற்றின் பரம்பல் தற்போது கட்டுப்பாட்டுக் 23

நயினை தாய்க்கு நாளை கொடியேற்றம்



23

ஐ.தே.க தனியாட்சி அமைத்தால்

தமிழர்களுக்கான தீர்வு சாத்தியமாகும்

ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தனியாட்சி அமைத்தால் மாத்திரமே தமிழர்களுக்கான தீர்வு சாத்தியப்படும் என ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



வாகனத்தில் சூட்சுமமாக மறைத்து கடத்தப்பட்ட

20 கிலோ கஞ்சா வவுனியாவில் மீட்பு

(வவுனியா)

வாகனம் ஒன்றுக்குள் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டு கடத்திச் செல்லப்பட்ட 20 கிலோ கேரளா கஞ்சாவுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 10 23

தபால் நிலையம் சனியும் இயங்கும்

(கொழும்பு)

சனிக்கிழமைகளில் தபால் நிலையங்களை மீண்டும் திறக்கத் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித் 23

யஸ்மின் சூக்காவுக்கு எதிராக ஐ.நா சபையில் முறைப்பாடு

(கொழும்பு)

சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்டத்தின் (ஐடிஜேபி) நிர்வாக இயக்குநர் யஸ்மின் சூக்காவிற்கு எதிராக, இலங்கை அரச புலனாய்வு சேவைப் பணிப்பாளர மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே சார்பில் நேற்று ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சூக்கா மற்றும் 23

மக்களுக்கான அரசை அமைப்பதற்கு தற்போது சந்தர்ப்பம் கிடைத்துள்ளது

பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது மக்கள் தங்களுக்கு தேவையான அரசாங்கத்தை நியமிப்பதற்கான ஜனநாயக உரிமை கிடைத்துள்ளது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பாக அறிக்கை ஒன்றை 23

வடக்கின் பாதுகாப்பு நிலைவரங்கள் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் தலைமையில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கின் பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து பலாலியில் நேற்று முன்தினம் உயர்மட்டக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அண்மையில் வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற சில சம்பவங்களை அடுத்து, பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து ஆராயும் விசேட கூட்டம் நேற்று முன்தினம் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தலைமையில் இடம்பெற்றது.

பலாலி படைத் தலைமையகத்தில் நடந்த இந்தக் கூட்டத்தில், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா, விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் சுமங்கல டயஸ், பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, தேசிய புலனாய்வு 23

இலங்கைக்கு உதவி செய்ய இந்தியா எப்போதும் தயார்

இந்தியத் தூதுவர் கோபால் தெரிவிப்பு

(கண்டி)

கொரோனா வைரஸ் உட்பட இலங்கை எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொள்வதற்காக இந்தியா தொடர்ந்தும் உதவி செய்யத் தயாராக இருப்பதாக இலங்கைக்கான புதிய இந்தியத்தூதுவராக கடமைகளைப் பொறுப் பேற்ற கோபால் பக்லே, கூறியுள்ளார்.

இலங்கைக்கான புதிய தூதுவராக கடந்த மாதம் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட கோபால் பக்லே, நேற்றைய தினம் கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்கு விஜயம் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்கு நேற்று விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டேன். பௌத்த மக்களுக்கு மட்டுமல்லாமல் உலக மக்களையும் பெருமளவில் ஈர்த்த தலமாக இது உள்ளதோடு கண்டி நகரமும் உலக மரபுரிமை நகரமாகவும் திகழ்கின்றது.

இலங்கை மக்களின் சுகவாழ்வு மற்றும் ஜக்கியத்திற்காகவும் இந்திய மக்களுக்காகவும் நான் நேற்று புத்தபெருமானிடம் மன்றாடினேன்.

அதேபோல இலங்கை - இந்தியாவுக்கு இடையிலான சிறந்த நட்புறவு உள்ளது. இருநாட்டு மக்களுக்கும் இடையிலும் சிறந்த தொடர்பு உள்ளது. இலங்கைக்கான தூதுவராக எனது பணிகளை சிறப்பாக செய்யவும் நான் வேண்டுதல் செய்தேன்.

இருநாடுகளும் மேலும் சிறப்பான தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்வதற்காக நாங்கள் இணைந்து தொடர்ந்தும் செயலாற்றுவோம் என்று கூறியுள்ளார்.

இதேவேளை, இந்தியாவில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. இதனால் இந்திய - இலங்கைக்கு இடையிலான வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்படுவது குறித்து ஊடக வியலாளர்களால் அவரிடம் கேள்வி யெழுப்பப்பட்ட போது,

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் உலக அளவில் காணப்படுகின்றது. அதிர்ஷ்டவசமாக இலங்கையில் இதன் தாக்கம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இலங்கைப் பொருளாதாரம் நாளுக்குநாள் கட்டியெழுப்பப்படுகின்றது. இந்தியப் பிரதமர் மோடியும் கடந்த மாதம் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு உரையாடியிருந்தார்.

இலங்கைப் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப தேவையான உதவிகளை வழங்குவதாகவும் உறுதியளித்திருந்தார். கடல்மார்க்கம் உட்பட பொருளாதார ரீதியில் நாங்கள் உதவிகளை இலங்கைக்கு வழங்குவோம் என்றும் கூறியிருந்தார். கோவிட்-19 உட்பட அனைத்து சவால்களிலும் இலங்கைக்கு நாங்கள் துணையாக இருப்போம் என்று பதிலளித்துள்ளார். (ம-3)

யாழ் மாநகரசபை தீயணைப்பு வீரர் அமரர் அ.சகாயராசாவின் இறுதி அஞ்சலிக்கூட்ட நிகழ்வு நேற்று யாழ் மாநகர தீயணைப்புப்படைப்பிரிவில் யாழ். மாநகர சபையின் ஆணையாளர் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது. (படங்கள் - சிவசாந்தன்)

பொறுப்புக்கூறலில் இருந்து மைத்திரி ஒரு போதும் விலக முடியாது

செஹான் சேமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஏப்ரல் 21 ஈஸ்டர் தின குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் பொறுப்பு கூறலில் இருந்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு போதும் விலக முடியாது. முப்படைகளின் பிரதானி என்ற அடிப்படையில் தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்த தவறியமையின் காரணமாகவே குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நல்லாட்சியின் இரு தலைவர்களும் பொறுப்பு கூற வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

பிரதேச சபையிலுள்ள துவிச்சக்கரவண்டி திருட்டு

(குப்பிழான்)

யாழ். வலிகாமம் கிழக்கு (புத்தூர்) பிரதேச சபையின் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த பெறுமதியான துவிச்சக்கர வண்டியினை நபரொருவர் திருடிச் செல்லும் காட்சி அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி காணொளியில் பதிவாகியுள்ளது

குறித்த சம்பவம் நேற்று வியாழக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடந்துள்ளது. சிவப்புத் தொப்பி, அரைக்கை சேட் அணிந்த நபரொருவரே குறித்த துவிச்சக்கர வண்டியைத்திருடிச் சென்றுள்ளார்.

இது தொடர்பாக திருட்டுப் போன துவிச்சக்கர வண்டியின் உரிமையாளரான வலி.கிழக்குப் பிரதேச சபை உத்தியோகத்தரால் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சி.சி.ரி.வி காணொளிப் பதிவும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,18)

அரசியலமைப்புக்கு முரணான வகையில்

எந்தவொரு வெளிநாடுகளுடனும் ஒப்பந்தம் செய்யவில்லை - பந்துல

(கொழும்பு)

அமெரிக்கா, சீனா உள்ளிட்ட எந்தவொரு வெளிநாடுகளுடனும் எமது நாட்டின் அரசியல்மைப்பிற்கு முரணான விடயங்கள் உள்ளடக்கப்பட்ட ஒப்பந்தங்களில் ஒரு போதும் கைச்சாத்திடப்போவதில்லை எனும் அதேவேளை, மிலேனியம் சலெஞ்ஞ் கோப்பரேஷன் உடன்படிக்கையும் அதற்கு விதிவிலக்கல்ல என்று அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

அத்தோடு இந்த உடன்படிக்கை தொடர்பில் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வதற்குப் பொதுத்தேர்தல் முடிவடையும் வரை காத்திருப்பதாக அமெரிக்கத்தூதுவர் கூறியிருப்பதாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என்பதுடன், வெளிநாடுகளுடனான இராஜதந்திரத் தொடர்புகளை மிகுந்த அவதானத்துடனேயே பேணிவருவதாகவும் அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிப்பதற்கான செய்தியாளர் சந்திப்பு நேற்று வியாழக் கிழமை கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது அமெரிக்காவுடனான மிலேனியம் சலெஞ்ஞ் கோப்பரேஷன் உடன்படிக்கையில் அரசாங்கம் கைச்சாத்திடப்போவதாக எழுந்திருக்கும் சர்ச்சைகள் தொடர்பில் தெளிவுபடுத்துகையிலேயே அரசாங்கத்தின் உத்தியோகபூர்வப் பேச்சாளர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

வவுனியா வேலங்குளம் இராணுவ முகாமில்

டுபாயிலிருந்து வருகை தந்த 168 பேர் தனிமைப்படுத்தலில்

(வவுனியா)

வவுனியா வேலங்குளம் இராணுவ முகாமில் அமைந்துள்ள கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு 168 விமானப் பயணிகள் கொண்டு வரப்பட்டனர்.

இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்புடன் பேருந்துகள் மூலமாக குறித்த விமானப் பயணிகள் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

டுபாயிலிருந்து இலங்கைக்கு வருகைதந்த அவர்கள் 14 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு கொரோனா தொற்றுள்ளதா என்ற பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3,299)

குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

அன்பர்களின் வேண்டுகோளுக்கமைய மீண்டும் மனவளக்கலை யோகாப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலால் நடாத்தப்படும் உடல், உள, உயிர் வளத்திற்கான ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் அன்பர்களின் வேண்டுகோளுக்கமைய ஆரம்பிக்கப்படவுள்ளதால் இந்த அரிய வாய்ப்பினைத் தவறாது பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- எளியமுறை உடற்பயிற்சி
- எளியமுறை தியானப்பயிற்சி
- காயகல்ப்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சி

(C-9725)

காலம் : 20.06.2020 சனிக்கிழமை தொடக்கம் 26.06.2020 வெள்ளிக்கிழமை வரை

நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணி வரை

குறிப்பு : கொவிட் - 19 சமூக பாதுகாப்பு விதிகளுக்கமைவாக பயிற்சிகள் வழங்கப்படுவதால் மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சியாளர்களே உள்வாங்கப்படுவர்.

தொடர்புகளுக்கு :- யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்

இல.81, பிறவுன் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம். தொ.இல. : 021 222 2772

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சமூகத்தின்

கண்ணீர்க் காணிக்கை

மண்ணில் : 02.11.1942 கண்நெகழ : 17.06.2020

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் முன்னைநாள் பொருளாளரும், சாவகச்சேரிப் பிரிவில் முன்னைநாள் செயலாளரும், சங்க ஆயுள்கால உறுப்பினருமாகிய

அமரர் படைவீரசிங்கம் குகவீரசிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்ப உறுப்பினர்களிற்கு எமது ஆறுதல்களை கூறி அவர்கள்தம் துயரில் பங்கு கொள்வதோடு அன்னாருடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் சாவகச்சேரி பிரிவு. (C-9726) ஆளுநர் சபை உறுப்பினர்கள், தொண்டர்கள்.

மகாவம்ச மனநிலை கொண்ட ஆட்சியாளர்களால் தமிழர்களின் மரபுரிமைகள் சிதைக்கப்படுகின்றன

கிழக்கு மாகாண தொல்லியல் செயலணி தேவையற்றது என்கிறது திருகோணமலை பொது அமைப்புகளின் ஒன்றியம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண தொல்லியல் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயலணி நியமனம் தமிழர் பூர்வீக நிலங்களை அபரிக்கும் செயல் என திருகோண மலை பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், ஜனாதிபதி செயலணியை முற்றாக நிராகரிக்கின்ற அதே வேளை, தமிழரின் தொன்மையையும் இருப்பையும் கேள்விக்குள்ளாகும் அரசியல் வேலைத் திட்டங்களை வன்மையாகக் கண்டிப்பதாக குறிப்பிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "ஆனி 2 ஆம் திகதி 2020-ஆம் ஆண்டு இலங்கை ஜனாதிபதியால் அதிவிசேட வர்த்தமானியூடாக வெளியிடப்பட்ட அறிவிப்பின் பிரகாரம் கிழக்கு மாகாண தொல்லியல் மரபுரிமைகளைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு கொடுப்பதற்கென பதினொரு அங்கத்தவர்களைக் கொண்ட செயலணியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (தலைவர்), கிழக்கு சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர், அரிசிமலை பௌத்த நாயக்க தேரர் உட்பட பௌத்த பிக்குகளும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

முன்மொழியப்பட்ட பெயர்களில் இரண்டாவது இடத்தில் இருப்பது அரிசிமலை பௌத்த நாயக்க தேரர். இவர் கிழக்கு மாகாணத்தை குறிப்பாக திருகோணமலையை சிங்கள பௌத்தமயமாக்கியதில் அவரின் வகிபங்கு இன்றியமையாதது.

இப்படியான ஒருவரை நியமித்தது இச்செயலணியின் உள்ளெண்ணத்தை வெளிக் கொணருகின்றது.

முற்றுமுழுதாக சிங்கள இனத்தவர்களைக் கொண்டமைக்கப்பட்ட செயலணியின் நியமனம் குறிப்பாக கொவிட்-19 நெருக்கடி காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட்டதன் உள் நோக்கம் கேள்விக்குட்படுத்தப்பட வேண்டிய அவசியம் எழுகின்றது.

மகாவம்ச மனநிலை கொண்ட சிங்கள அரசுகளின் ஒற்றை அரசியல் நிகழ்ச்சித் திட்டமாக, சிங்கள-பௌத்த ஒற்றைக் கலாசாரத்தைக் கொண்ட தேசக் கட்டுமானப் பணியில் முதலிடப்படுகிறது. இவ் ஒற்றைக் கலாசாரக் கட்டமைப்பின் உச்சக்கட்டமாக, அரச இயந்திரக் கட்டமைப்பு வலுவை மையப்படுத்தி, இராணுவமயப்படுத்தி, இலங்கை, சிங்கள-பௌத்த தேசமே என மீளவும் தமிழ் மக்களுக்கும் ஏனைய சிறுபான்மை இனக்குழுக்களுக்கும் நினைவூட்டி வருகின்றது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளின் ஆரம்பப் புள்ளியாக இணைந்த வடக்கு-கிழக்கும் தமிழர்களின் பூர்வீகத் தொன்மையும் மிக முக்கிய அலகுகளாகும். ஈழத் தமிழர்களின் பாரம்பரிய இருப்பைச் சிதைக்கும் அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தில் பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அவற்றின் முதற்கட்டமாக வடக்கு-கிழக்கு பிரிப்பு அரங்கேற்றப்பட்டது. பிரிப்புக்கு முன்னரேயே கிழக்கில் தமிழர்களின் செறிவைக் குறைத்து பல்லின பரம்பலை முன்னெடுக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் தான் தமிழ் பாரம்பரிய நிலங்களான அம்பாறை மாவட்டம், திருகோணமலை மாவட்டம் போன்றன தமிழர்களின் குடிசனப் பரம்பல் குறைந்த மாவட்டங்களாக வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

தொல்லியல் திணைக்களம் தமிழர்களின் பூர்வீக நிலங்களை அபகரிப்பதில் தீவிரமாகச் செயற்பட்டு வருவதை மறுப்பதற்கில்லை. இச்செயலணிக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு நில அபகரிப்பின் தீவிரத்தன்மை சட்ட வலுவாக்கம் பெறுகின்றது. தொல்லியல் திணைக்களம் கிழக்கு மாகாணத்தில் ஈழத் தமிழர் பூர்வீகத்தின் இருப்பை திரிபுபடுத்தி, சிக்கலுக்கு உட்படுத்தி வரலாற்றியலை தனக்கு சாதகமாக வடிவமைத்துக் கொண்டு வருகின்றது.

இம்முயற்சியின் ஆகப் பிந்தைய வடிவம்தான் இச்செயலணி நியமனமாகும். ஈழத் தமிழர்களின் தொன்மையை சிக்கலுக்குட்படுத்தி ஏற்கனவே சிங்கள-பௌத்த தேசியவாத புழக்கத்தில் உள்ள 'தமிழர்கள் வந்தேறு குடிகள்' என்ற வரலாற்றுச் சொல்லாடலை வலுப்படுத்துவதோடு ஈழத் தமிழர்களின் தொன்மையின் இருப்பை கேள்விக்கும் உட்படுத்துகின்றது.

தமிழ்-முஸ்லிம் இணைப்பு மூலம் தான் இரு இனங்களும் தங்கள் உரிமைக் கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கை. இரு இனங்களுக்கான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதன் மூலம்தான் எங்களுடைய இருப்பை தக்க வைத்துக்கொள்ள முடியும்.

எனவே, இச்செயலணியை நாம் முற்றாக நிராகரிக்கின்ற அதேவேளை, எமது தொன்மையையும் இருப்பையும் கேள்விக்குள்ளாக்கும் அரசியல் வேலைத் திட்டங்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்" என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

குணமடைந்தோர் 1421

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

மேலும் 24 பேர் பூரணமாகக் குணமடைந்து நேற்று வியாழக்கிழமை வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி தற்போது வரையான காலப்பகுதியில் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1421 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் இதுவரை 1924 பேர் இலங்கையில் கொரோனா நோயாளிகளாக அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

மேலும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களில் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரட்ன சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக நியமனம்!

(கொழும்பு)

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அனுமதியுடன் தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

ஏற்கனவே பொலிஸ் பொது மக்கள் இணைப்புப்பிரிவின் பணிப்பாளராகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளராகவும் ஜாலிய சேனாரத்ன கடமையாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

கொரோனாத்தொற்று காரணமாக தங்கத்தின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை சந்தையில் தங்கத்தின் விலை பாரியளவு அதிகரித்துள்ளது.

இதுவரையில் ஒரு பவுண் தங்கத்தின் விலை 83 ஆயிரம் முதல் 84 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக சந்தைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

செய்கூலியுடன் சேர்த்து ஒரு பவுண் தங்கத்தின் விலை 90 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரவலுக்கு முன்னர் ஒரு பவுணின் விலை 70 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இதேவேளை கொரோனாத் தொற்று காரணமாக உலக சந்தையில் தங்கத்தின் விலை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

மின்சாரவாரியத்திற்கு 2ஆயிரம் கோடி ரூபா இலாபம்

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மின்சாரம் வழங்கியதற்காக இலங்கை மின்சார வாரியத்திற்கு கிடைக்கப்பெற்ற வருமானம் 2 ஆயிரம் கோடி ரூபாய் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சர் மகிந்த அமரவீர இதனை தெரிவித்துள்ளார். (ஜ-4)

நீருக்கடியில் முதல் அருங்காட்சியகம்

(கொழும்பு)

நாட்டில் முதலாவது நீருக்கடியில் நிர்மாணிக்கப்பட்ட அருங்காட்சியகம் காலியில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வாவினால் அண்மையில் திறக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் மேற்பார்வையின் கீழ், இலங்கை கடற்படையினரால் காலி கடற்பகுதியில் நீருக்கடியில் குறித்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

நீருக்கடியில் உள்ள அருங்காட்சியகம் காலி கடற்பகுதியில் சுமார் 50 அடி ஆழத்தில் அமைந்துள்ளது .

நீருக்கடியில் உள்ள அருங்காட்சியகத்தில் புகையிரதப் பெட்டிகளையும் மீன்பிடிப் படகுகளையும் காட்சிக்காக பயன்படுத்த முதலில் முடிவு செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து குறுகிய காலத்தில் புகையிரதப் பெட்டிகளையும் மீன்பிடிப் படகுகளையும் சேகரிப்பதில் சிரமம் இருந்ததால் பல்வேறு வகையான சிலைகள் மற்றும் நினைவுப் பொருட்களைப் பயன்படுத்தி அருங்காட்சியகத்தில் கடற் படையினர் காட்சிப்படுத்தியுள்ளனர்.

இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் பவளப்பாறைகளை மீண்டும் உருவாக்குவதும் மீன் வளத்தை அதிகரிப்பதும் ஆகும். (ஜ-4)

பேருந்து கொள்வனவிற்கு இலகு வட்டிக் கடன்

(கொழும்பு)

தனியார் பேருந்து துறையைக் கட்டியெழுப்புவதற்காக பேருந்துகளை கொள்வனவு செய்ய 4 வீத இலகு வட்டிக்குக் கடன் பெற்றுக் கொடுக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும், தாழ்வான அடிப்பகுதியை கொண்ட பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு மாத்திரமே இந்த இலகு கடன் வழங்கப்படும் எனவும் லொறி அடிச்சட்டங்களில் வடிவமைக்கப்படும் பேருந்துகளுக்கு இதன் பின்னர் அனுமதி வழங்கப்படாது எனவும் பயணிகள் போக்குவரத்துக்கென முறையாக வடிவமைக்கப்பட்ட பேருந்துகளுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

ஜனாதிபதியின் கொள்கைகளை செயற்படுத்துவதால் இலக்கை அடைய முடியும்- அருந்திக கூறுகிறார்

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கியே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் மக்கள் ஆட்சியதிகாரத்தை ஒப்படைத்துள்ளார்கள் என்றும் ஜனாதிபதியின் கொள்கைகளை செயற்படுத்தினால் மாத்திரமே இலக்கினை அடைய முடியுமென்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு. ஜனாதிபதியின் தீர்மானங்களை அரச மற்றும் தனியார் துறையினர் பின்பற்ற வேண்டும்.

பாரிய எதிர்பார்ப்புக்களை கொண்டு பெரும்பான்மையின மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தெரிவு செய்தார்கள். மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற ஜனாதிபதி உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கு ஜனாதிபதி முன்னுரிமை வழங்குவார் என்ற நம்பிக்கை தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

"ஆரோக்கியமான தேசத்தை உருவாக்க கவனத்துடன் உண்போம்" இலங்கை போசனையாளர் சங்கத்தின் சித்திரப் போட்டி

(கொழும்பு)

"ஆரோக்கியமான தேசத்தை உருவாக்க கவனத்துடன் உண்போம்" எனும் தொனிப்பொருளில் இலங்கை போசணையாளர் சங்கம், கல்வி அமைச்சுடன் இணைந்து சித்திரப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

போசணை மனித வாழ்வில் இன்றியமையாததாகும். இந்தப் போட்டியானது பாடசாலை மாணவர்களிடையே ஆரோக்கியமான வாழ்க்கைக்கு கவனத்துடன் உண்ண வேண்டும் என்பதை உணரவைக்கும் நோக்குடனேயே நடத்தப்படவுள்ளது.

குறித்த போட்டி பாடசாலை மாணவர்களிடையே வகை 1 : தரம் 1 - 5 , வகை 2 : தரம் 6-9 , வகை 3 : தரம் 10 -13 ஆகிய பிரிவுகளில் நடத்தப்படவுள்ளன.

போட்டியில் 1ஆம் பரிசு ஆறாயிரம் ரூபாய், 2ஆம் பரிசு நாலாயிரத்து ஐந்நூறு ரூபாய் ரூபாய் , 3ஆம் பரிசு மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய் ரூபாய் மற்றும் 10 சாதாரண பரிசுகள் வழங்கப்படவுள்ளதுடன், வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

வெற்றி பெறும் ஓவியமானது இலங்கை போசணையாளர் சங்கத்தினதும் , கல்வி அமைச்சினதும் வலைத்தளம் மற்றும் அவற்றின் பதிப்புகளிலும் பிரசுரிக்கப்படும் .

போட்டியின் அறிவுறுத்தல், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளாக,

ஓவியங்கள் A3 (11.7 x 16.5 inches) அளவு தாள்களில் வரையப்பட வேண்டும். அனுமதிக்கப்பட்ட வரைய பாவிக்கக் கூடிய பொருட்களாவன பஸ்டல் (Pastel) , நீர் வண்ணங்கள் (water colours) , சுவரொட்டி நிற வண்ணங்கள் (poster colours) , மற்றும் எண்ணெய் வண்ணங்கள் (Oil paints) போன்றனவாகும். டிஜிட்டல் ஓவியங்கள் மற்றும் படத் தொகுப்பு ஓவியங்கள் (collage photos) அனுமதிக்கப்பட மாட்டாது. எல்லா ஓவியங்களும் " ஆரோக்கியமான தேசத்தை உருவாக்க கவனத்துடன் உண்போம் " என்ற தொனிப் பொருளிலேயே இருக்க வேண்டும் எனவும் ஓவியத்தின் பின்புறத்தில் உங்கள் ஓவியத்திற்கான தலைப்பு , முழுப்பெயர் , பிறந்த திகதி , வயது , வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் , வகை , பாடசாலை மற்றும் தரம், ஓவியம் உங்களுடையது என்பதை உறுதிப்படுத்த பெற்றோர் / பாதுகாவலர் / வகுப்பு ஆசிரியர் / பாடசாலை அதிபரினதோ கையொப்பம் இருத்தல் வேண்டும் எனவும் நல்ல தரமான போட்டோவாகவோ (high quality photograph) அல்லது ஸ்கேன் பிரதியாகவோ (scanned copy) உங்கள் ஓவியத்தையும் ஓவியத்தின் பின் புறத்தையும் 2020 ஆடி மாதம் 30ஆம் திகதியிலோ / அதற்கு முன்னராகவோ sl.nutritionsociety@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பமுடியும் எனவும்,

மேலதிக விபரங்களுக்கு ஹசங்கா ரத்னாயக்க (071 8154005 / 0779120 130) தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெற்றியாளர்கள் தமது ஓவியங்களின் மூலப் பிரதிகளை அனுப்புவது தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும். (ஜ-4)

இராசிபலன்

19.06.2020
ஆனி 05, வெள்ளிக்கிழமை
திரயோதசி முற்பகல் 11.41 மணிவரை
கார்த்திகை முற்பகல் 11.25 மணிவரை
சுபநேரம் 5.54-7.24 மணிவரை
இராகுகாலம் 10.24-11.54 மணிவரை
சந்திராஷ்டமம் சுவாதி, விசாகம்

வளவன்

மேஷம்

சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

ரிஷபம்

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

மிதுனம்

எடுத்த செயலை முடிக்க ஒன்றுக்கு மேற்பட்ட தடவை அலைய நேரிடலாம், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், சுப விரயம் கூடும்.

கடகம்

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

சிம்மம்

மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, செய் தொழில் மேன்மையுண்டு.

கன்னி

பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

துலாம்

மறதியால் ஒருசில பணிகளை செய்யாமல் விட்டு விடுவீர்கள், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

விருச்சிகம்

தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும், போசன சுகமுண்டு.

தனுசு

கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

மகரம்

ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பிள்ளைகளின் நீண்டநாளைய விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

கும்பம்

வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

மீனம்

பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள்.

மாபெரும் எண்ணங்கள் இதயத்திலிருந்து வருகின்றன.

நிதிக் கம்பனிகள் தமது தேவைக்காக வறிய மக்களை இரையாக்குகின்றன

கரு குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இயங்கும் அனைத்து நிதிக்கம்பனிகளும் மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் உரிய சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு இயங்கும் வகையிலான திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய முன்னாள்சபாநாயகர்கரு ஜெயசூரிய, அதுவரையில் வறிய மற்றும் கல்வி அறிவற்ற மக்கள் இந்நிதிக்கம்பனிகளால் ஏமாற்றப்படுவதைத் தவிர்க்க முடியாது என்றும் தெரிவித்தார்.

நிதிக்கம்பனிகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் கொவிட் - 19 இன் பின்னரான பங்குச் சந்தை நிலவரம் தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அப்பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நாட்டில் பின்தங்கிய, வறிய பிரதேசங்களில் பதிவுசெய்யப்படாத நிதிக்கம்பனிகள் தமது மிகமோசமான இரக்கமற்ற செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்படுப்பதற்கான சுதந்திரத்தைப் பெற்றுள்ளனர்.

உண்மையில் சில நிதிக் கம்பனிகளே மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. ஏனைய கம்பனிகள் தமது தேவைகளுக்கு வறிய மற்றும் கல்வியறிவற்ற மக்களை இரையாக்குகின்றன.

அக்கம்பனிகள் அனைத்தும் உரிய சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு செயற்படக்கூடியவாறான கட்டமைப்பொன்று உருவாக்கப்படுவது தற்போது மிகவும் அவசியமானதாகும்.

இவற்றோடு பங்குச்சந்தையில் ஏற்பட்டிருக்கும் தாக்கம் தொடர்பிலும் சுட்டிக்காட்டியிருக்கும் அவர், கொவிட் - 19 வைரஸ் பரவலைத் தொடர்ந்து பங்குச்சந்தையானது பெரும் எண்ணிக்கையான பெரிய மற்றும் சிறிய முதலீட்டாளர்களை இழக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது..

இந்த அச்சுறுத்தல் நிலை தற்போது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பங்குகளைக் கொள்வனவு செய்வதை விடவும், அவற்றை விற்பனை செய்வதில் நாட்டம் காண்பிக்குமளவிற்கு அதிகரித்திருக்கிறது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார். (ஜ-4)

கதிர்காம முருகன் உற்சவ அழைப்பு பிரதமர் மகிந்தவிடம் கையளிப்பு

(கொழும்பு)

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் முருகன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை ஜூலை மாதம் 21 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வரை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமம் முருகன் ஆலய உற்சவத்திற்கான அழைப்பை ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் நேற்று முன்தினம் கையளித்தார். (ஜ-4)

குடு திலானுக்கு மரண தண்டனை

(கொழும்பு)

ஹெரோயின் 274 கிராம் வைத்திருந்த குற்றச்சாட்டு தொடர்பில் குற்றவாளியான தேவாகே துசித குமார எனும் குடு திலான் என்பவருக்கு மரண தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. நீண்ட விசாரணையின் பின்னர் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் திகதி குறித்த நபர் பத்தரமுல்ல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார். பின்னர் சட்டமா அதிபரினால் குறித்த நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த நபருக்கு எதிராக எவ்வித சந்தேகங்களும் இன்றி குற்றம் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு மரண தண்டனை விதிப்பதாக நீதிபதி தீர்ப்பளித்தார். (ஜ-4)

தனிமைப்படுத்தலிலிருந்து 225 பேர் வீடுகளுக்கு

(கொழும்பு)

முப்படையினரால் நடத்திச் செல்லப்படும் 44 தனிமைப்படுத்தல் நிலையங்களில் கண்காணிக்கப்பட்டு வந்த 225 பேர் நேற்று வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை நிறைவு செய்த குறித்த 225 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் கொரோனா தொற்று ஏற்படவில்லை என உறுதிசெய்யப்பட்டுள்ளதாக இராணுவ ஊகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்ரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை முப்படையினரால் நடத்திச் செல்லப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து இதுவரையான காலப் பகுதியில் 14 ஆயிரத்து 735 பேர் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் விநியோகம்

(குப்பிழான்)

யாழ். மாவட்டத்தில் அதி உயர் வெப்பம் காரணமாக ஏற்பட்டுள்ள வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான குடிநீர் விநியோகம் மேற்கொள்வதற்காகப் பாதுகாப்பு அமைச்சின் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தால் 7.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த நிதி நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர், சங்கானை மற்றும் சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 15, 419 குடும்பங்களின் வரட்சிக்காலக் குடிநீர் விநியோகத்திற்காக வழங்கப்படுகிறது.

யாழ்.மாவட்டச் செயலக அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் தரவுகள் மூலம்மேற்கண்ட விபரம் தெரிய வந்துள்ளது. (4-5-18)

வடக்கு மாகாண வளர்ச்சிக்கு துறைசார் திட்டங்களை தேசிய கொள்கையிலிருந்து விலகாமல் உடன் தயாரியுங்கள்

வடக்கு ஆளுநர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வளர்ச்சிக்கான உரிய துறைகள் சார்பில் பொருத்தமான கொள்கைத் திட்டங்களை தாமதமின்றித் தயாரிக்குமாறு வடக்கு ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் வலியுறுத்தினார்.

அத்துடன், தேசிய கொள்கைகளிலிருந்து விலகாமல் வடமாகாண வளர்ச்சிக்குத் தகுந்தாற்போல் அனைத்து மாகாண அமைச்சுக்களும் துறைசார் கொள்கைகளை உருவாக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தலைமையில் மாகாண அமைச்சுகளின் செயற்பாடுகள் தொடர்பான மாதாந்த மீளாய்வுக் கூட்டம் ஆளுநர் செயலகத்திலுள்ள மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஆளுநரின் செயலாளர்கள், பிரதம செயலாளர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் ஆளுநர் மேலும் தெரிவிக்கையில், "தேசிய கொள்கைகளிலிருந்து விலகாமல் வடக்கு மாகாண வளர்ச்சிக்குத் தகுந்தாற்போல் அனைத்து மாகாண அமைச்சுக்களும் துறைசார் கொள்கைகளை உருவாக்க வேண்டும். அதனடிப்படையிலேயே துறைசார் அமைச்சரவை அறிக்கையையும் தயார் செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-5)

தனிமைப்படுத்தலில் இருந்த ஒருவருக்கு தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று முன்தினம் 91 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட கொரோனாத் தொற்று பரிசோதனையில் இரணைமடு தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. (4-5)

கரவெட்டி பிரதேச செயலகத்தில் சமூக சேவை பகுதியினரால் குறைந்த வருமானம் பெறுபவர்கள் 6 பேருக்கு தையல் இயந்திரம் பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ. தயாரூபன், சமூக சேவை உத்தியோகத்தர் வரதா பாஸ்கரன் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படம்: கரணவாய் செய்தியாளர்)

மோ.சைக்கிள் விபத்தில் இளைஞன் படுகாயம்

(குப்பிழான்)

ஊரெழு- நீர்வேலி வீதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த 22 வயது இளைஞரொருவர் படுகாயமடைந்தார்.

மேற்படி வீதியில் குறித்த இளைஞன் நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் தனது வீடு நோக்கிச் சென்ற போது மோட்டார் சைக்கிளில் வந்த இனம்தெரியாத நபர்கள் இளைஞனை மோதிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் படுகாயங்களுக்குள்ளான இளைஞன் தொலைபேசியில் உதவி கோரியதையடுத்து அவரது நண்பர்களின் உதவியுடன் இளைஞன் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டார்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-18)

நூல் அன்பளிப்பு செய்ய வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையால் அழகியற்துறை சார்ந்த நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்நூலகத்திற்கு அழகியற்கலை சார்ந்த நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் வட இலங்கை சங்கீத சபையுடன் தொடர்பு கொண்டு அன்பளிப்புச் செய்து நூல்களுக்கான பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வட இலங்கை சங்கீத சபைத் தலைவர், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா கேட்டுக் கொண்டுள்ளார். (4-5)

சீனாவிடமிருந்து மேலும் கடன்

(கொழும்பு)

சீனாவிடம் இருந்து மற்றும் ஒரு கடன் திட்டத்தை இலங்கை பெற்றுக்கொள்ளவுள்ளது. சீனாவின் அபிவிருத்தி வங்கியிடம் இருந்து 140 மில்லியன் டொலர்களை இலங்கை பெற்றுக்கொள்ளவுள்ளது.

இதில் இந்த மாதத்துக்குள் 70 மில்லியன் டொலர்கள் இலங்கைக்கு கிடைக்கவுள்ளன. மீதித்தொகை இந்த வருடத்துக்குள் இலங்கைக்கு வழங்கப்படும் என்று சீனத் தூதரகம் அறிவித்துள்ளது. கொரோனா வைரஸ் காரணமாக ஏற்பட்டுள்ள நிதிச் சிக்கலை சமாளிப்பதற்காகவே இந்தக்கடன் பெற்றுக்கொள்ளப்படுவதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த மே 13 ஆம் திகதியன்று சீன ஜனாதிபதி இலங்கையின் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் கலந்துரையாடியதன் ஒரு கட்டமாகவே இந்தக் கடன் திட்டம் அமைந்துள்ளது என்று இலங்கையில் உள்ள சீனத்தூதரகம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தின் "விதையனைத்தும் விருட்சமே" செயற்திட்டத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நாளை 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. ஆர்வமுடையவர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5)

சவுக்கம் காட்டில் தீ!

(கரணவாய்)

வடமராட்சி மணற்காடு சவுக்கம் காட்டிற்கு விஷமிகளால் கடந்த 16 ஆம் திகதி தீ வைக்கப்பட்டுள்ளது.

இத் தீவைப்புச் சம்பவத்தில் சுமார் ஒரு ஏக்கர் வரையான சவுக்கு மரங்கள் எரிந்து நாசமாக்கியுள்ளன.

அப்பகுதி மக்களால் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை பிரதேச சபை தண்ணீர் பவுசர் மூலம் தண்ணீர் பாய்ச்சி தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரபாகரமூர்த்தி மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை ஊழியர்கள், இராணுவம், பொதுமக்கள், இணைந்து இத் தீயணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். குறித்த மணற்காடு சவுக்கம் காட்டுப் பகுதியில் அண்மைக்காலமாக விஷமிகளால் தீ வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

மேலும் அப்பகுதி தீயை அணைப்பதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து மணற்காடு நோக்கி விரைந்து சென்ற யாழ்.மாநகர சபைக்கு சொந்தமான தீயணைப்பு வாகனம் நீர்வேலிப் பகுதியில் விபத்துக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (4-5-60)

அரியாலை AAC பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் கனடா வாழ் திரு. திருமதி ரஜீவன் துஷிதா ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் 25 குடும்பங்களுக்கு தலா ரூபாய் 2200 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி நகரசபையின் கழிவு முகாமைத்துவத்தில் புதிய திட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை வேல்ட் விஷன் லங்கா மற்றும் செவணத அமைப்புக்களுடன் இணைந்து கழிவு முகாமைத்துவத்தை ஏற்படுத்தி நகரை சுத்தமாக வைத்திருக்கவும் சூழல் மாசடைவைத் தவிர்க்கவும் திட்டமிட்டுள்ளது.

ஜேர்மன் நாட்டின் பி.எம்.சட் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் இடம்பெறும் குறித்த கழிவு முகாமைத்துவத் திட்டம் சம காலத்தில் பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் ஆரம்பிக்கப்படுகின்றன. இலங்கையில் வத்தளை பிரதேச சபை, ஜாஎல பிரதேச சபை மற்றும் சாவகச்சேரி நகரசபை ஆகியன குறித்த மூன்று வருட ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

குறித்த கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் மூலமாக சூழல் மாசடைவைத் தடுத்து சூழலின் அழகைப் பாதுகாப்பதுடன், கழிவுப் பொருட்களை மீள் சுழற்சிக்கு உட்படுத்துவதுடன் ஊடாக நகர மக்கள் வருமானத்தை ஈட்ட முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

சாவகச்சேரி நகரசபை நகரில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையை முற்றாக தடுக்கும் முகமாக கடந்த வருடம் கோர் நிறுவனத்துடன் இணைந்து செயற்பட்டதுடன், நகரில் உள்ள உணவகங்களில் லஞ்சீற் பாவனை, திருமண மண்டபத்தில் பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல் பாவனை ஆகியவற்றையும் கட்டுப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-5-30)

வட இலங்கைச் சங்கீத சபை
யாழ்ப்பாணம்

பரீட்சைகள் பிரிவு
பரீட்சைக் கடமைகளுக்காக வாகனங்களை வாடகை அடிப்படையில் அமர்த்துவதற்கான கூறுவிலை கோருதல்

வட இலங்கைச் சங்கீத சபையினால் 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர்/நவம்பர் மாதத்தில் கொழும்பு, பண்டாரவளை, கண்டி, ஹற்றன், மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலுள்ள பரீட்சை நிலையங்களுக்கு உத்தியோகத்தர்களுடன் (4 பேர்) வினாத்தாள் பொதிகளையும் எடுத்துச் செல்லுதல் மற்றும் மீளத் திரும்புதலுக்குப் பொருத்தமான உரிய தராதரங்களை உடைய இலகுரக வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வட இலங்கைச் சங்கீத சபை அலுவலகத்தில் (கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்) விண்ணப்பப் படிவங்களையும் அறிவுறுத்தல் கையேட்டினையும் ரூபா 500/- செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்- 0212242319.

விண்ணப்ப முடிவுத் திகதி- 15.07.2020.

செல்வரட்ணம் சந்திரராஜா...
கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் கல்வி வலயம்,
தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை- யாழ்ப்பாணம்

(அ-9716)

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா: செவ் 3 இல் உயரம்:170cm
தகைமை/தொழில்: College of education, ஆசிரியர்.
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/10819

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: 24 செவ் 7 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: Diploma, சுகாதாரப் பரிசோதகர்.
எதிர்பார்ப்பு: தனியார்,அரச உத்தியோகம் பார்க்கும் பெண் (தீவுப்பகுதி, கிளிநொச்சி வேண்டாம்)
தொ.இ: B/10823

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 60 செவ் 8 இல் உயரம்: 157cm
தகைமை/தொழில்: B.Sc. QS, கட்டாரில் வேலை செய்கின்றார்.
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10825

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: செவ் 8 இல் உயரம்:5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. வெள்ளி ரும்பு வேலை
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10828

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா: 29 ¾ செவ் 7 இல்
உயரம்: 5"
தகைமை/தொழில்: M.Sc.MBA, Research Assistant.
எதிர்பார்ப்பு: சம தகுதியுடைய மணமகன். சைவபோசனம் உடையவர் மட்டும்
தொ.இ: G/10840

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: 19½ சூரி,செவ் 5 இல்
உயரம்:170cm
தகைமை/தொழில்: B.Sc. Quantity Surveyor
எதிர்பார்ப்பு: QS, or Engineer & Internal Degree only.
தொ.இ: G/10841

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரம் 1
கி.பா: 34½ செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: GAQ.
எதிர்பார்ப்பு: சொந்த, நிரந்தர உத்தியோகம்
தொ.இ: G/10844

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா: சூரி,செவ் 12 இல் உயரம்: 5'3"
தகைமை/ தொழில்: Diploma in Software Engineering.
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/10846

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

திருமதி.வனசா ஸ்ரீரங்கநாதன்
SLTS-I (1990.03.15 - 2020.06.19)

சேவை விபரம்

மு/நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை	15.03.1990-08.05.2001
மு/பாண்டியன்குளம் ம.வி.	09.05.2001-15.11.2009
யா/மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்	16.11.2009-31.12.2009
மு/பாண்டியன்குளம் ம.வி.	01.01.2010-31.12.2012
மு/பாண்டியன்குளம் ஆ.பா.	01.01.2012-17.01.2012
மு/வவுனிக்குளம் மத்திய சுலுசு அ.த.க.பா	18.01.2012-22.01.2012
மு/பாண்டியன்குளம் ஆ.பா.	23.01.2012-22.05.2013
மு/அம்பாள்புரம் அ.த.க.பா.	23.05.2013-20.02.2014
மு/வவுனிக்குளம் மத்திய சுலுசு அ.த.க.பா	21.02.2014-25.05.2015
மு/பாண்டியன்குளம் ஆ.பா.	27.05.2015 தொடக்கம் இன்று வரை

வந்தாரை வாழவைக்கும் வன்னி வள நாட்டில்
முல்லை மண்ணின் மாந்தை கிழக்கதனில்
மூன்று தசாப்தங்களாய் ஆசிரியப் பணியில்
பல அறிவாளிகளையும் ஒழுக்க சீலர்களையும் தந்த
நல்லாசான் திருமதி.வனசா ஸ்ரீரங்கநாதன்
"என் கடன் பணி செய்து கிடப்பதே பெருமிதம்" என
சவால்கள் பலவற்றையும் எதிர்கொண்டு
அறுபது அகவை வரை சிட்டாய் சிறகடித்துக்
கல்வியில் புலமையும் கடமையில் நேர்மையும்
நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்
பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் எழுந்து
பள்ளி எங்கும் பவனி வந்த மாதரசியாய்
மணிவிழாக்காணும் எம் ஆசானை
வளங்களோடும் நலங்களோடும் இன்புற்று
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சமூகம்
மு/பாண்டியன்குளம் ஆரம்பப்பாடசாலை

பொதுத்தேர்தல் வேட்பாளர்கள் சொத்து விபரங்களை வெளியிட வேண்டும்
பப்ரல் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கட்சி ரீதியாகவும் சுயேட்சை ரீதியாகவும் போட்டியிடும் வேட் பாளர்கள், தேர்தலுக்கு முன்பாக தங்களது சொத்து விபரங்களை வெளியிட வேண்டும் என பப்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்து ள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களுக்கிடையில் தேர் தல் செயலகத்தில் நேற்று முன் தினம் சந்திப்பொன்று இடம் பெற்றது.

குறித்த சந்திப்பில் பொலிஸ் அதிகாரிகள், சுகாதாரத்துறை அதிகாரிகள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப் பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் பொதுத்தேர்த லில் கட்சி ரீதியாகவும் சுயே ட்சை ரீதியாகவும் ஏழாயிர த்து 452 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதேவேளை பொது மக் களுக்கு சேவையாற்ற வேண் டும் என்ற நோக்கில் தேர்த லில் போட்டியிடுபவர்கள் தாங்கள் இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகளுக்கு எதி ரானவர்கள் என்பதை பொது மக்களுக்கு அறிவிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக இந்தக் கோரிக்கை முன்வைக்கப்ப டுவதாக அவர் மேலும் தெரி வித்தார். (ஜ-8)

கர்ப்பிணித்தாய்மார் உட்பட 290 பேர் டுபாயிலிருந்து நாடு திரும்பினர்

(கொழும்பு)

டுபாயிலிருந்து 290 இலங் கையர்கள் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கை விமான சேவை யின் விசேட விமானம் மூலம் இவர்கள் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர்.

இவர்களில் 120 கர்ப்பிணி தாய்மார்களும் அடங்குவதாக ஜனாதிபதி மேலதிக செயலா ளர் அட்மிரல் ஜயநாத் கொல ம்பகே தெரிவித்தார். விமான நிலையத்தில் இவர்களுக் கான பி.சி.ஆர் .பரிசோனை கள் முன்னெடுக்கப்பட்டன.

இதேநேரம்,மடகஸ்கார், உகண்டா மற்றும் இந்தியா விலிருந்தும் மேலும் சிலர், அடுத்த வாரத்தில் நாடு திரு ம்பவுள்ளமை குறிப்பிடத்த க்கது. (ஜ-8)

முன்னாள் போராளிகள் கூட்டமைப்புடன் இணைந்தால் அது தலைவருக்கும் மாவீரருக்கும் செய்யும் துரோகமே

சிவசக்தி ஆனந்தன் ஆக்ரோஷம்

(வவுனியா)

முன்னாள் போராளிகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் அதன் தலைவரையும் கொச்சைப்படுத்தும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன்இணைவார்களாகவிருந்தால் தலைவருக்கும்அவர்களுடன் இணைந்த மாவீரர்கள், மாவீரர் குடும்பங்களுக்கும் அவர்கள் இழைக்கின்ற பெரிய தொரு துரோகத்தனமாகத்தான் நான் பார்க்கின்றேன் என தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். ஊடகவியலாளரின் கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னாள் போராளிகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இணைத்துக் கொள்வது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயும் தமிழரசுக் கட்சிக்குள்ளேயும் முரண்பட்ட கருத்துக்கள் நிலவிக் கொண்டிருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளது போராட்டத்தையும் தலைவர் பிரபாகரனையும் கடந்த காலத்தில் சம்பந்தன் பாராளுமன்றத்தில் மிக மோசமான முறையில் விமர்சனம் செய்திருந்தார்.

குறிப்பாக அவர்களது போராட்டம் பயங்கரவாதப் போராட்டம். அவர்களுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியமைக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை. பிரபாகரனையோ அல்லது ஆயுதப் போராட்டத்தையோ தாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று பாராளுமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் பகிரங்கமாக தெரிவித்த பிற்பாடு தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் தங்களுடைய தலைவரையும் அந்த தியாகங்களையும் கொச்சைப்படுத்துகின்ற ஒரு கட்சியோடு அவர்கள் இணைந்து கொள்வார்களாகவிருந்தால் அது அந்த தலைவருக்கும் அவர்களுடன் இணைந்த மாவீரர் குடும்பங்களுக்கும் அவர்கள் இழைக்கின்ற பெரிய தொரு துரோகத்தனமாகத்தான் நான் பார்க்கின்றேன்.

அண்மையில் கூட்டமைப்பினர் தாம் முன்னாள் போராளிகளை இணைத்துக்கொள்வதாக ஊடகங்களில் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

போராளிகளில் அக்கறை இருந்தால் போராளிகளுக்கு 2009 இற்குப் பிற்பாடே சந்தர்ப்பம் கொடுத்திருக்கலாம். எதுவுமே செய்யாமல் அவர்களது தியாகத்தை மட்ட ரகமாக கொச்சைப்படுத்தி விட்டு தற்போது பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இவர்களுக்கு முன்னாள் போராளிகள் மீது அதிக பாசம், பற்று இருப்பதாக காட்டுவது என்பது இவர்களது பொய்யும் பிரட்டுமான பிரசாரம் என சிவசக்தி ஆனந்தன் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

அகிம்சைப் போராட்டம் தோற்றதாக சரித்திரம் இல்லை

ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்ட தலைமை வேட்பாளரும் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான துரைராஜசிங்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்தை சார்ந்தவர்கள் உதயசூரியன் சின்னத்தை வாடகைக்கு எடுத்துக் கொண்டதாக ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு பதவி மோகம் கொண்ட ஒரு சிலர் செய்த கூட்டுச் சதியால், எமது கட்சிக்கு ஏற்பட்ட நெருக்கடியான சம்பவங்களை நேருக்கு நேர் நின்று எதிர்க்க துணிவில்லாமல், சம்பந்தப்பட்டவர்களிடம் பதவிக்காக சரணாகதி அடைந்தவர்களும் உண்டு.

கட்சியின் மத்திய செயற்குழு பதவியில் இருந்து இராஜினாமாச் செய்து விட்டு, ஓடி ஒளிந்து கொண்டவர்களும் உண்டு என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் யாழ்.கிளிநொச்சி மாவட்ட வேட்பாளருமான வீ.ஆனந்த சங்கரி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும், எங்கள் கட்சியினர் ஜனநாயகத்தை மதிப்பவர்கள், அதன் வழி நடப்பவர்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி அகிம்சை ரீதியில் ஜனநாயக கோட்பாடுகளுக்கு அமைவாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஒரே ஒரு ஜனநாயகக் கட்சி.

இருந்தும் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க அனைத்துத் தரப்பினரையும் ஒன்றாக அரவணைத்துக் கொண்டு ஓர் அணியில் செயற்பட வேண்டும் என்ற நோக்கில் இயங்கிக் கொண்டு



வருகின்றோம்.

புலிகளை கூண்டோடு அழித்துவிட்டேன் என்று கொக்கரித்த இராணுவத் தளபதிக்கு, ஜனாதிபதி தேர்தலில் வீடு வீடாக சென்று வாக்களியுங்கள் என்று, அவருக்கு வாக்கு சேகரித்துக் கொடுத்த குள்ளநரிக் கூட்ட மல்ல நாங்கள்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் முன்னாள் ஜனாதிபதிக்கும் முன்னாள் பிரதமருக்கும் நெருங்கிய சகாக்களாக இருந்த உங்கள் கட்சி சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், ஒரேயொரு அரசியல் கைதியையாவது விடுதலை செய்ய சொல்லிக் கேட்டிருக்கலாம் அல்லவா? யுத்தம் முடிந்து 10 வருடங்களுக்கு மேலாகியும் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்று சுகபோக வாழ்வை அனுபவித்ததை தவிர, தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு எதையாவது பெற்றுக் கொடுத்துள்ளதா?

எமது போராட்டம் அகிம்சை வழியிலானது. எமது இலட்சியத்தை நிச்சயம் வென்றெடுப்போம். அகிம்சை போராட்டம் தோற்றதாக சரித்திரம் கிடையாது என ஆனந்தசங்கரி தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

தேர்தல் வியூகம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழர் விடுதலைக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு

இதை மக்கள் மறக்கக்கூடாது – சாள்ஸ்

(கிளிநொச்சி)

எதிர்காலத்தில் எங்களுடைய மக்கள் அந்நிய தலையீடு இல்லாமல் வாழ வேண்டிய ஒரு காலச் சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை நாங்கள் பலம் அடையச் செய்ய வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வன்னி பாராளுமன்ற தேர்தல் வேட்பாளருமான சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கன்கரத்தினபுரம் கிராமத்தில் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய சூழ்நிலையில் தமிழர்கள் தனித்துவமாக வாழ்வதனையும் தமிழர்களின் தனித்துவமான கட்சியை உடைப்பதற்காகவுமே தேசிய கட்சிகள் எங்களுடைய பிரதேசங்களில், இருக்கின்ற நபர்களை தேசிய கட்சிக்குள் இணைத்து களம் இறங்குகின்றன.

அந்த வகையில் நான் உங்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், தமிழர்கள் தனித்துவமாக பயணிக்க வேண்டிய தேவை இருக்கிறது. கட்டாயமாக நாங்கள் ஒரே நிலைப்பாட்டில் இருக்க வேண்டிய பொறுப்பும் எங்களிடம் இருக்கின்றது.

எங்களுக்கு மக்கள் தந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் எங்களால் முடிந்த பங்களிப்பை நாங்கள் செய்து வருகின்றோம். தொடர்ச்சியாக உங்களுடைய பங்களிப்பும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு இருக்க வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாக இருக்கின்றது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் ஒரு சில தனிப்பட்ட நபர்கள் அல்லது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு சிலருடைய செயற்பாடுகளை வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒட்டுமொத்தமாக பிழை செய்கிறது என்ற கருத்தை தயவு செய்து யாரும் ஏற்றுக்கொள்ள வேண்டாம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழர்களுடைய விடுதலைக்காக உருவாக்கப்பட்ட ஒரு ஜனநாயக அமைப்பு என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

வீழ்ந்து கிடக்கும் வடமாகாண கல்வியை மீட்டெடுப்பதே எமது இலக்கு-கணேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினராக நான் தெரிவுசெய்யப்பட்டால் எனது சம்பளமோ, எனது கார் பெர்மிட்டோ, இதர சலுகைகளையோ எதையும் அனுபவிக்கப் போவதில்லை. இவை அனைத்தையும் கஷ்டப்படும் மக்களுக்கும் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்குமே வழங்குவேன் என ஜக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட வேட்பாளர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளரின் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் தேர்தலில் வெற்றி பெற்றால் எமது முதலாவது இலக்கு வடமாகாணத்திலே வீழ்ந்திருக்கும் கல்வியை படிப்படியாக முன்னேற்றுவதோடு விளையாட்டுத்துறையிலும் வளர்ச்சியை ஏற்படுத்துவதே. நாட்டில் சமவுரிமை பேணப்பட வேண்டியது அவசியமாகும். சிறுபான்மையினர் என்றொரு வார்த்தையை நான் அனுமதிக்க மாட்டேன் என சஜித் பிரேமதாஸ கூறியிருந்தார். நான் அவரைப் பெரிதும் நம்புகிறேன்.

சஜித் தமிழர், சிங்களவர் என வேறுபாடு பார்ப்பவராக இருந்தால் நிச்சயமாக அந்தக் கட்சியில் அங்கத்தவராக நான் இருக்க மாட்டேன் என ஜக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட வேட்பாளர் கணேஸ்வரன் வேலாயுதம் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

இன்சாப் அஹமட்-ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்குமான தொடர்பு சட்டத்தரணி எனும் ரீதியிலான தொடர்பு மாத்திரமே

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஹிஜாஸின் சட்டத்தரணி மன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தின, தொடர் தற்கொலை தாக்குதல்கள் குறித்த விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்டு சி.ஐ.டியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை மன்றில் ஆஜர்படுத்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிடுவதா? இல்லையா? என எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தனது தீர்மானத்தை அறிவிப்பதாக கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க நேற்று முன்தினம் அறிவித்தார்.



ஹிஜாஸ் ஹிஸ்புல்லா சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி வசந்த நவரத்ன பண்டார நேற்று முன்தினம் கோட்டை நீதிமன்றில் முன்வைத்த விசேட வாதத்துக்கு அமையவே அவர் இதனை அறிவித்தார்.

கொழும்பு, சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் குறித்த வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது சி.ஐ.டி. சார்பில் அவ் வழக்கு தொடர்பில் ஆஜராகிய பொலிஸ் சார்ஜன் மேலதிக விசாரணை அறிக்கையினை சமர்ப்பித்து விசேட கோரிக்கைகள் இரண்டை முன்வைத்தார்.

"இந்த விவகார விசாரணைகளில், ஹிஜாஸ் ஒமர் ஹிஸ்புல்லா எனும் சந்தேக நபரிடம் விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துள்ளோம்.

அவரது பங்களிப்புடன் புத்தளம் - மதுரங்குளி பகுதியில் நடத்திச் செல்லப்பட்ட மத்ரஸாவில் இருந்து 19 புத்தகங்களை நாம் கைப்பற்றினோம். அதில் அங்கு கற்பிக்கப்பட்டதாக நம்பப்படும் 3 தமிழ் மொழி மூலமான புத்தகங்களை நாம் கைப்பற்றியுள்ளோம்.

அம்மூன்று புத்தகங்களையும் சிங்கள, ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு மொழி பெயர்த்து இன்று இம்மன்றில் சமர்ப்பிக்கின்றோம். அவற்றை கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு அனுப்பி, சிறுவர் மனநலம் குறித்த விசேட வைத்திய நிபுணர் ஒருவர் ஊடாக விசேட அறிக்கை ஒன்றினைப் பெற்றுத்தருமாறு கோருகின்றோம்.

அதாவது அந்தப் புத்தகங்களை சிறுவர்களுக்கு கற்பிப்பதன் ஊடாக, சிறுவர்கள் வன்முறையின் பால் தூண்டப்படுவார்களா, தற்கொலைதாரிகளாக ஆகும் அளவுக்கு உளவியல் மாற்றமடைய வாய்ப்புள்ளதா? எனும் விடயங்களை மையப்படுத்தி இந்த அறிக்கை கோரப்படுகின்றது.

அத்துடன் தற்கொலை குண்டுதாரியான மொஹம்மட் இப்ராஹீம் இன்சாப் அஹமட் என்பவரின் மடிக் கணனியும் டி.வி.டி. உபகரணமும் சி.ஐ.டி.யினரால் கைப்பற்றப்பட்டிருந்தன. அவற்றை அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி அறிக்கை பெறவும் உத்தரவு தருமாறு கோருகின்றோம்" என்றார். அவற்றை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் அதற்கு அனுமதியளித்தது.

இந்நிலையிலேயே, மன்றில் சந்தேக நபர் ஆஜர் செய்யப்படாத போதும், மேலதிக விசாரணை அறிக்கையில் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவின் பெயர் சந்தேக நபராக பெயரிடப்பட்டிருந்த நிலையில், அவர் சார்பில் தான் ஆஜராவதாக ஜனாதிபதி சட்டத்தரணி வசந்த நவரத்ன பண்டார, பசன் வீரசிங்க, ஹபீஸ் பாரிஸ், ரணிலா சேனாதீர உள்ளிட்ட சட்டத்தரணிகளுடன் ஆஜரானார்.

அரசியலமைப்பின் 13 (1) ஆம் சரத்து ஒருவரைக் கைது செய்யும் போது அவர் கைது செய்யப்படுவதற்கான காரணத்தை தெளிவுபடுத்த வேண்டும் என்கிறது. எனது சேவை பெறுநர், சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கைது செய்யப்படும் போது அவர் எதற்காக கைது செய்யப்படுகின்றார் என்பது தெளிவுபடுத்தப்படவில்லை.

அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சாட்சிகள் இதுவரை நீதிமன்றில் கூட முன்வைக்கப்படவில்லை. அவரை தடுத்து வைக்க ஜனாதிபதி கையெழுத்திட்டு அனுமதித்துள்ள, தடுப்புக் காவல் உத்தரவில் அவர் இன்சாப் அஹமட் எனும் தற்கொலை குண்டுதாரிக்கு உதவி ஒத்தாசை புரிந்தமை தொடர்பில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

எனினும் அந்த குண்டுதாரிக்கு உதவி ஒத்தாசை புரிந்தமை தொடர்பில் இதுவரை எந்த ஆதாரங்களும் முன்வைக்கப்படவில்லை. இன்சாப் அஹமட் எனும் குண்டுதாரியுடன் எனது சேவை பெறுநருக்கு ஒரு சட்டத்தரணி எனும் ரீதியிலான தொடர்பே இருந்தது.

எனினும் தற்போது விசாரணைகள், ஹிஜாஸ் ஹிஸ்புல்லா சிறுவர்களுக்கு அடிப்படைவாதத்தை போதித்து அவர்களை மூளைச் சலவை செய்ததாகக் கூறி விசாரணைகள் நடக்கின்றன. அது தொடர்பில் ஹிஜாஸ் கைது செய்யப்பட்ட பின்னர், இரு சிறுவர்கள் இம்மன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இரகசிய வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குற்றவியல் சட்டத்தின் 127 ஆம் அத்தியாயத்துக்கு அமைய நீதவானின் அறையில் பதியப்படும் அந்த வாக்கு மூலத்தில், உள்ள விடயங்கள் மறுநாள் ஒரு சிங்களப் பத்திரிகையில் உள்ளது. இது எப்படி சாத்தியம். அப்படியானால் அந்த வாக்குமூலம் ஏற்கனவே தயார் செய்யப்பட்டு சொல்லிக்கொடுக்கப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். அதனையே இந்த அதிகாரிகள் ஊடகங்களுக்கு வழங்கியுள்ளனர்.

இந்நிலையில் விடயங்களை ஆராய்ந்த நீதவான் ரங்க திஸாநாயக்க, ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை மன்றில் ஆஜர் செய்ய உத்தரவிடுவது குறித்த தீர்மானத்தை எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி அறிவிப்பதாகக் கூறினார்.

(ஜ-4)

உ
சிவமயம்

காரைநகர் களபூமி திக்கரை முருகன் தேர் வடம் பிடித்து நற்கதி பெற்று ஸ்கந்த கிரியில் இடம் பிடிப்போம்

ஐயுந்திமெய் நொந்து பொறி ஐந்து மோய்ந்தே,
அறிவின்றி உளம் அஞ்சி உயர் மங்கும் போதே
நெய்கின்ற வடிவேல் திக்கரை முருகனே
நினையன்றி எனை யஞ்சல் எனுமாவலரே!

கருணைக் கடலாகிய குஹப் பெருமானே அடியேன் ஐம்புலன்களும் ஒடுங்கி அறிவிழந்து வாயினின்றும் கோழைகள் வெளிப்பட அச்சத்தால் அங்கம் நடுங்க மரணம் நெருங்கிப் பரிதவிக்கும் போது தேவரீர் விரைவாக எனது எதிரில் எழுந்தருளிக் காட்சியளித்துக் காப்பாற்ற வேண்டும்.

இன்று தேர்த்திருவிழாவில் எண்குணங்களும் சார்ந்து விளங்கப் பெற்ற, உயிர் மூன்று பத முத்திகளையும், மூன்று தொழில்களையும் மூன்றுருவத்தையும் வெறுத்து நீக்கி "வீடுபேறு" ஒன்றையே அலாவி நிற்றல், மூன்று மலங்களையும் நீக்குதல், வழிபடுகின்ற அடியார்களின் துன்பங்களை முருகப் பெருமான் நீக்கி திருவருள் புரிதல், வள்ளி தெய்வானை சமேத திக்கரை முருகன் அழகான தேரின் மீது எழுந்தருளியவராக, விண்ணிடத் தேவர்களும் மண்ணிடத்து மனிதர்களும் நல் வாழ்வடைய, அனுபவித்துக் காண்பவர்களது கண்கள் ஆனந்தக் கண்ணீரை மழையாகச் சொரிய அழகு திருவீதியில் வலமாகச் சுற்றிவர, நாமும் வடம் பிடித்து அரகர முருகா , குமரா, குகா, என சிவயோக நெறியையும், அவரே பிறந்து அழியாமலும்,அடியார்களாகிய நாம் ஆன்மா இறையுடன் இரண்டறக் கலந்து அத்துவிதமாகும் முருகப் பெருமானின் திருப்புகழ் அனுதினமும் ஓதவும் திக்கரை முருகன் திருவடிகளைப் பாடி பேரருள் பெற்று உய்வோமாக, நற்கதி பெறுவோமாக.

இந்த ஆண்டு (2020) வருடாந்த மகோற்சவ திருவிழா சிறப்புற நடாத்திய சிவபூசை செய்து தம்மைச் சிவமாக்கி கிரியைகள் செய்த மதுசூதன குருக்கள், (பிரதமகுரு சித்தங்கேணி மகா கணபதி பிள்ளையார் கோவில் ஐயா) அவர்களின் ஆசீர்வாதம் எல்லோருக்கும் கிடைக்க முருகன் திருவருள் புரிவாராக. "ஓம் நமசிவாய"

ஓம் சரவண பவ ஓம் சண்முகா சரணம்...

க.கு.க. சிவபாலன்
அடியாருக்கு அமுதூட்டும் அண்ணலார்.

(C-9724)

மஹோற்சவம்

(குப்பிழான்)

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 8.45 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

இதேவேளை, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக அரசாங்கமும் சுகாதாரப் பிரிவினரும் விதித்துள்ள கட்டுப்பாடுகளுக்கமைய மதித்து மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்கள் மாத்திரம் ஆலய மஹோற்சவத்தில் கலந்து கொள்வதுடன், அடியவர்கள் கைகழுவுதல், சமூக இடைவெளி, முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல் உள்ளிட்ட நடைமுறைகளை பின்பற்ற வேண்டுமெனவும் ஆலய பரிபாலன சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (4-5-18)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஞான வைரவப் பெருமானின் சங்காபிஷேகம் கடந்த 9 ஆம் திகதி கல்லூரி உப அதிபர் சு.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வு, நாட்டின் இடர்கால நிலையைக் கருத்திற் கொண்டு மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

கொவிட் - 19 காரணமாக ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி நிலையிலும் கூட, பெருந் தோட்டத் தொழிலாளர்களின் நல்வாழ்விற்கு அவசியமான சம்பள உயர்வு உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் அதேவேளை, அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிப்பதற்கான ஊடக வியலாளர் சந்திப்பு நேற்று வியாழக்கிழமை கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதாக தற்போதைய அரசாங்கம் பலதடவைகள் உறுதியளித்திருக்கும் நிலையில் அதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளிக்கையிலேயே அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பேச்சாளர் ரமேஷ் பத்திரண இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வை வழங்குவது தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் தோட்ட உரிமையாளர்களுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இதன்போது தற்போதைய நிலவரம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. கொவிட் - 19 வைரஸ் பரவலையடுத்து நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடி நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை வழங்குவதில் காணப்படும் சிக்கல்கள் குறித்து தோட்ட உரிமையாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

எனினும் அரசாங்கம் தற்போதைய நெருக்கடி நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து, அவர்களது நல்வாழ்விற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதையே முக்கியமானதாகக் கருதுகின்றது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

ஞானசார தேரரின் குற்றச்சாட்டை துருக்கி தூதரகம் நிராகரிப்பு

(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் குற்றச்சாட்டை துருக்கி தூதரகம் நிராகரித்துள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சம்பவத்துடன் துருக்கியை தொடர்புபடுத்தியிருந்தமைக்கு துருக்கி எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இயங்கி வரும் அரேபிய சர்வதேச பாடசாலைகளில் கடும்போக்குவாத விடயங்கள் கற்பிக்கப்படுவதாகவும் இதற்கு முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் மற்றும் துருக்கிய அரசாங்கமும் உதவியதாக ஞானசார தேரர் தன்து சாட்சியத்தில் குற்றஞ்சாட்டியிருந்தார். இந்நிலையில் துருக்கி தூதரகம் தெரிவித்துள்ளதாவது,

நூற்றாண்டுக்கு மேலாக இரு நாடுகளுக்கும் இடையில் வலுவான நட்புறவு காணப்படுவதாகவும் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பல்வேறு வழிகளில் இலங்கைக்கு உதவிகளை வழங்கி வருவதாகவும் பயங்கரவாதம் காரணமாக பாதிக்கப்பட்ட நாடு என்ற ரீதியில் துருக்கி எல்லா சந்தர்ப்பங்களிலும் இலங்கையில் பயங்கரவாதம் காணப்பட்ட காலத்தில் அதற்கு ஆதரவு வழங்கியதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஜ-4)



சாதனை படைத்த இளைஞனை சந்தித்து பாராட்டிய அங்கஜன்

(முறிகண்டி)

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் மோட்டார் வாகனம் ஒன்றை வடிவமைத்த இளைஞனை முன்னாள் விவசாய பிரதியமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் நேரில் சென்று பாராட்டினார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குறித்த இளைஞனின் வீட்டுக்கு சென்ற அங்கஜன் இராமநாதன் இளைஞனால் வடிவமைக்கப்பட்ட மோட்டார் வாகனத்தை பார்வையிட்டதுடன் அதன் வடிவமைப்பு தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

குறித்த வாகனத்தை பதிவு செய்வதற்கான நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும் என தெரிவித்ததுடன், சாதனையின் முதல் படியையே எட்டியுள்ளதாகவும் பல சாதனைகளைப் படைக்க வேண்டும் என வும் தெரிவித்தார். (4-5-100)

வவுனியா சண்முகபுரத்தில் புலம்பெயர் நிதி உதவியில் குழாய்க்கிணறு அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

விநாயகமூர்த்தி விநோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சண்முகலிங்கம் வைபவ ரீதியாக குடிநீர் குழாய்க்கிணற்றை மக்கள் பாவனைக்காக திறந்து வைத்தார்.

இத்தாலி மனிதநேய சங்கத்தின் பொறுப்பாளர் மகேஸ்வரநாதன் கிருபாகரனின் ஒழுங்கமைப்பில் "ரிசா சாறி சுவிஸ்" நிறுவனத்தின் உரிமையாளர் பாஸ்கரன் செல்வியின் நிதி உதவியில் குறித்த குடிநீர் குழாய்க்கிணறு அமைக்கப்பட்டது. (படம்:- நெளுக்குளம் செய்தியாளர்)

காவலுக்கு நின்ற நாய்களை களவாடிய கொள்ளைக் கும்பல்

மோட்டார் சைக்கிளும் தீக்கிரை

(நெளுக்குளம்)

வவுனியா கூமாங்குளம் பகுதியில் வாள்களுடன் சென்ற நபர்களால் மோட்டார் சைக்கிள் ஒன்று எரிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை கூமாங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் உள்நுழைந்த சிலர் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை தீக்கிரையாக்கியுள்ளதுடன், வீட்டின் கதவு மற்றும் யன்னல்களையும் உடைத்துவிட்டு, வீட்டில் வளர்க்கப்பட்ட இரண்டு விலையுயர்ந்த நாய்க்குட்டிகளையும் களவாடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்குச் சென்ற குற்றத்தடுப்பு பிரிவினர் அப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் நேற்று மாலை இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

(4-5-250-299)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு ஒருபோதும் பொறுப்பேற்க மாட்டேன்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி மறுப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான பொறுப்பை நான் ஒருபோதும் ஏற்க மாட்டேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுப்புத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து கேள்வியெழுப்பப் பட்டது. இதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் இவ்வாறான தாக்குதலொன்று நடைபெறப்போகின்றது என்பது தனக்குத் தெரிந்திருக்கவில்லை என்று சுட்டிக்காட்டிய அவர் அதனால் அதற்காக தான் பொறுப்பேற்கப் போவதில்லை எனவும் கூறினார்.

மேலும் குறித்த தாக்குதல் குறித்து முன்பே தெரிந்திருந்தால் அதற்கான நடவடிக்கைகளை தான் மேற்கொண்டிருப்பேன் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

உரிய நேரத்தை ஒதுக்கி வாருங்கள்

மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிவுறுத்து

(கொழும்பு)

மோட்டார் வாகனப் போக்கு வரத்துத் திணைக்களத்துக்கு வருகை தருபவர்கள் தமக்கு உரிய நேரத்தினை ஒதுக்கிக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமக்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்ளாத எவருக்கும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்துக்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது. காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரையிலான காலப்பகுதிக்குள் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள அலுவலக தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து தமது நேரத்தை ஒதுக்கிக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-8)

இடுகம கொவிட்- 19 சமூக பாதுகாப்பு நிதிய மீதி ஆயிரத்து 386 மில்லியனாக அதிகரிப்பு

(கொழும்பு)

தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் 'இடுகம' கொவிட் -19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ஆயிரத்து 386 மில்லியனாக அதிகரித்துள்ளது.

ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை பணிக்குழாம் 2இலட்சம் ரூபாவையும், சிறுமி டபிள்யூ. எம். இசினி டெக்லா வர்ண சூரிய 6 ஆயிரத்து 300 ரூபாவையும், எச்.ஆர்.ஆரியவங்ச 500 ரூபாவையும், அநுராதபுர மாநகர சபை பிரதி மேயர் எம்.டபிள்யூ.புத்திக பிரேமதாஸ அவரது மூன்று மாத சம்பளமான 88 ஆயிரத்து 825 ரூபாவையும், தேசிய வீடமைப்பு அதிகார சபை பணிக்குழாம் 25 இலட்சம் ரூபாவையும், **Sri Lanka Association of Inbound Tour Operators** நிறுவனத்தின் உறுப்பினர்கள் 10 இலட்சம் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளனர். இதற்கான காசோலைகள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

பாணந்துறை சுமங்கல பாலிகா மகா வித்தியாலய பழைய ஆசிரியர்கள் 3இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவையும், **Ocean Lanka (Private) Limited** நிறுவனம் 10 இலட்சம் ரூபாவையும், **U P Building Construction** நிறுவனம் 4 இலட்சம் ரூபாவையும், எஸ். ஏ. தர்மசேன தம்பதியினர் ஒரு இலட்சம் ரூபாவையும், மஹாங்க சமரசிங்க தம்பதியினர் 2 இலட்சம் ரூபாவையும், ராஜகிரிய தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் தனிமைப் படுத்தலை நிறைவுசெய்த ஜப்பானில் இருந்து வருகை தந்தவர்கள் 47 ஆயிரத்து 500 ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளனர்.

தற்போது இடுகம கொவிட் 19 சுகாதார, பாதுகாப்பு நிதியத்தின் மீதி ஆயிரத்து 386 மில்லியன் ரூபாவாகும்.

உள்நாட்டு வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இக்கணக்கிற்கு பங்களிப்பு செய்துவருகின்றனர். காசோலைகள் அல்லது டெலிகிராப்கள் மூலமும் **www.itukama.lk** என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது **#207#** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பங்களிப்பை செய்ய முடியும்.

076 070 0700/ 011 232 0880/ 0112354340/ 0112424012 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (ஜ-4)

பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு 150 பில்லியன் ரூபா கடனுதவி

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக நாட்டில் பாதிக்கப்பட்டுள்ள வர்த்தகர்களுக்கு 150 பில்லியன் ரூபா நிதியை கடனாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த நிதி இலங்கை மத்திய வங்கியின் உரிமம் பெற்ற வணிக வங்கிகள் ஊடாக வழங்கப்படவுள்ளது.

சரிவடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பாக இலங்கை மத்திய வங்கி அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அறிவுறுத்தியதற்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

உள்நாட்டுத் தொழில்களுக்கு 4 சதவீத வட்டி அடிப்படையில் கடன் வழங்கும் நிலையில், மத்திய வங்கி ஒரு சதவீத வட்டி அடிப்படையில் கடன் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கட்டுமானத் துறையினருக்கு தனியான கடன் திட்டம் ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. கட்டுமான நிறுவனங்கள் செலுத்த வேண்டிய தொகைக்குச் சமனான தொகையை அரசாங்கத்தால் வழங்கப்படும் உத்தரவாத வட்டி சலுகைகளுக்கு கடன் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வங்கிகளில் நிலையான வைப்புக்கான இருப்பு வீதம் கடந்த 16 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 2 வீதமாக குறைக்கப்பட்டதன் மூலம் வர்த்தகர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஜ-8)

அரச விருது விழாக்களை வழமை போன்று நடத்தலாம்

(கொழும்பு)

அரச விருது வழங்கும் விழா மற்றும் கண்காண்காட்சிகளை இந்த வருடத்தில் வழமைபோன்று நடத்துமாறு கலாசார அமைச்சு, உரிய பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

சாகித்திய விழா, நாடக விழா, தொலைக்காட்சி விருது வழங்கல் விழா உள்ளிட்ட அரச விருது வழங்கும் நிகழ்வுகளை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிஸ் சந்திர தெரிவித்தார்.

இதற்கான திட்டங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் கலாசார அமைச்சுக்கு கையளிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

பாரதம்

கொரோனாவின் உச்சத்தில் இந்தியா
ஒரேநாளில் 12,880 பேர் பாதிப்பு



(டில்லி)

இந்தியாவில் கொரோனா வால் பாதிக்கப்பட்டோரின் எண் ணிக்கை 3.66 லட்சமாக உயர் ந்துள்ள நிலையில், 1.94 இலட் சம் பேர் குணமடைந்துள்ள னர்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகி றது. ஊரடங்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, பொதுவெளியில் மக்கள் நடமாட்டம் அதிகரித்தி ருப்பதாலும் பரிசோதனைகளை அதிகரிப்பதாலும் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணி க்கை தொடர்ந்து உயர்கிறது. அதேசமயம் குணமடைந்தவர் களின் எண்ணிக்கையும் கணி சமாக உயர்ந்து வருகிறது.

இந்நிலையில், நேற்றுக் காலை மத்திய சுகாதாரத்துறை வெளியிட்ட தகவலின்படி இந்தி யாவில் நேற்று முன்தினம் மட்டும் கடந்த 24 மணி நேர த்தில் 12,881 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 334 பேர் மரணம் அடைந்து ள்ளனர். இதன்மூலம்கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 12,237 ஆக உயர்ந்துள்ளது. (2)

ஐ.நா.பாதுகாப்புச் சபையில்
8வது தடவையாக உறுப்பினரானது இந்தியா

(ஜெனிவா)

ஐ.நா.பாதுகாப்பு சபையில் ஐந்து தற்காலிக உறுப்பினர்க ளுக்கான தேர்தலில் இந்தியா 184 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றது.

ஐ.நா.சபையின் பாதுகாப்பு சபையில் அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா, சீனா பிரான்ஸ் ஆகிய நாடுகள் நிரந்தர உறுப் பினர்களாக உள்ளன.

பிராந்திய அடிப்படையில் 10 நாடுகள் தற்காலிக உறுப்பினர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுகி ன்றன. இந்த தற்காலிக உறுப் பினர்களின் பதவிக் காலம் இர ண்டு ஆண்டுகள்.

மொத்தம் உள்ள 10 தற்கா லிக உறுப்பினர் இடங்களில் ஐந்து இடங்களுக்கான தேர்தல் ஆண்டுதோறும் நடத்தப்படு வது வழக்கம்.

இந்நிலையில் பாதுகாப்பு சபையின் 2021மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான ஐந்து தற் காலிக உறுப்பினர் நாடுகளை தேர்வு செய்வதற்கான தேர்தல் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடை பெற்றது.

இதில் ஆசிய-பசுபிக் பிராந்தி யத்துக்கான இடத்துக்கு இந் தியா போட்டியிட்டது. இதில் இந்தியாவுக்கு ஆசிய-பசுபிக் பிராந்தியத்தை சேர்ந்த சீனா, பாகிஸ்தான் உட்பட 55 நாடுக ளும் ஆதரவு தெரிவித்துள் ளன. அதனால் தேர்தலுக்கு முன்பே இந்தியா வெற்றி பெறு வது உறுதியாகிவிட்டது.

கொரோனா பரவல் காரண மாக சமூக இடைவெளியை கடைப்பிடிக்கும் வகையில் ஐ.நா. வின் 193 உறுப்பு நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகளும் வாக்க ளிப்பதற்கு வசதியாக தனித் தனியாக நேரம் ஒதுக்கப்பட்டி ருந்து.

ஐ.நா.பொதுச் சபை மண்ட பத்தில் வைக்கப்பட்டிருந்த வாக் குப் பெட்டியில் உறுப்பு நாடு களின் பிரதிநிதிகள் அவர்க ளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நேரத் தில் வாக்களித்தனர். அனை த்து நாடுகளும் வாக்களித்த பின்னர் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. மொத்தமுள்ள 193 உறுப்பினர்களில், 184 வாக்குகள் இந்தியாவுக்கு விழு ந்ததையடுத்து, இந்தியா இமா லய வெற்றிபெற்றது.

இந்தியாவுடன் அயர்லாந்து, மெக்ஸிக்கோ மற்றும் நோர்வே ஆகிய நாடுகளும் வெற்றி பெற் றன. இந்தியா 8 ஆவது முறை யாக ஐ.நா.பாதுகாப்புச் சபையில் உறுப்பினராகி உள்ளமை குறிப் பிடத்தக்கது. (2)

பிரேஸிலில் ஒருநாளில் மட்டும்
37 ஆயிரத்திற்கு மேல் பாதிப்பு

(றியோடி ஜெனிரோ)

பிரேஸிலில் கடந்த செவ்வா ய்க்கிழமை 37 ஆயிரத்து 278 பேருக்கு புதிதாக கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது. இதுவே நாளொன்று க்கு பதிவான அதிக எண்ணிக் கையாகும்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நிலைமை கட்டுப்பாட் டில் இருப்பதாக அந்நாட்டின் உயர் அதிகாரி ஒருவர் கூறியிரு ந்த நிலையில் குறித்த தினமே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள் ளது.

உலகளவில் அமெரிக்கா விற்கு பின்னர் அதிக உயிரிழப் புக்கள் பதிவாகிய நாடுகளின் பட்டியலில் பிரேஸில் உள் ளமை குறிப்பிடத்தக்கது. (2)

கொரிய தீபகற்பத்தி
இராணுவ விலக்கு அளி
படைகளைக் குவிப்போம்-

(சியோல்)

டி மிலிட்டரைஸ்டு சோன் எனப்படும் இராணுவ விலக் நாட்டுக்கும் பொதுவான பரஸ்பர பகுதியில் படைக வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளதால் கொரிய தீபற் சூழ்ந்துள்ளது.

கொரிய தீபகற்பத்தில் வட், தென் கொரியா இடையே பல ஆண்டுகளாக மோதல் நிலவி வருகிறது.

இரு நாடுகளுக்கும் இடையே நிலவி வரும் முரண்பாடுகளை களைய உலக நாடுகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன. ஆனாலும், இந்தப் பிரச்சினைக் கும் வெகு ஆண்டுகளாக தீர்வு கிடைக்காமல் உள்ளது.

அந்த கட்டடம் அமைந்திரு ந்த பகுதி "டி மிலிட்டரைஸ்டு சோன்" எனப்படும் நாடுகளுக்கு இரா ணுவ விலக்கு அளிக்கப்பட்ட இரு பொது வான பரஸ்பர இடமாகும். அப்பகுதியில் முன்னதாக இரு நாடுகளைச் சேர்ந்தவர்க ளும் பணி செய்தனர்.

இந்த விவகாரம் தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்த வடகொரியாவுக்கு தென் கொரியா கோரிக்கை விடுத்தது. மேலும், தங்கள் நாட்டு தூதர்களை அனுப்பவும் விருப்பம் தெரிவித்தது. ஆனால், தென் கொரியாவின் கோரிக்கையை வடகொரியா நிராகரித்தது.

இந்நிலையில், எல்லையில் உள்ள

குரங்குகளுக்கு உணவளிக்கும்
கூலித்தொழிலாளியின் மனிதநேயம்



(சென்னை)

தனக்கு இயலாத நிலையி லும் இடைவிடாத மனிதநேயத் துடன் குரங்குகளுக்கு உணவு வழங்கி வரும் கூலித்தொழிலா ளியின் பணியை அந்தப் பகுதி மக்கள் பாராட்டுகின்றனர்.

தஞ்சை மாவட்டம்கல்லணை யில் இருந்து திருச்சி செல்லும் வழியில் வீதியோர்ங்களில் புளிய மரங்கள் அதிக அளவில் உள்ளன. இந்த புளிய மரங்க ளில் நிறைய குரங்குகள் வசி த்து வருகின்றன. இந்த குரங்கு கள் உணவு தேடி வீதியில் அங் கும், இங்கும் அலைவதையும் அங்குள்ள பேருந்து நிறுத்தத்தில் காத்திருக்கும் பயணிகளிடம் ஏதாவது கிடைக்குமா என்று ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டி ருப்பதையும்கல்லணை அருகே உள்ள வேங்கூர் கிராமத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி நடராஜன் கவனித்து வந்தார்.

அந்த குரங்குகளுக்கு ஏதா வது உணவு வழங்க வேண் டும் என்று அவர் எண்ணினார். அவைக ளுக்கு உணவளிக்கத் தீர்மானித்தார். தினமும் உணவுடன் வீதிக்கு வந்து குரங்குகளை அழைப்பார்.

அழைத்ததும் அவைகள் மரத்தில் இருந்து கீழே இறங்கி வந்து வீதியோரத் தில் வைக்கும் உணவை உண்ணும். மீண்டும் மரங்களில் ஏறிச்சென்று விடுகி ன்றன. இது ஏதோ ஒருநாள், இரண்டு நாள் நடப்பது அல்ல. கூலித்தொழிலாளி யான நடராஜன் கூலி வேலைக்கு சென்று அதன்மூலம் கிடைத்து வரும் வருவாயை கொண்டு கடந்த ஒரு ஆண் டாக இந்த உணவு வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார். தனக்கு இயலாத நிலையிலும் இடைவிடாத மனிதநேயத்து டன் குரங்குகளுக்கு உணவு வழங்கி வரும் நடராஜனின் பணியை அந்த பகுதி மக்கள் பாராட்டுகின்றனர். (2)

வெளிநாடு

பத்தில் போர் மேகம்

அளிக்கப்பட்ட பகுதியிலும் ாம்-வடகொரியா மிரட்டல்

ரியா தன் பங்கிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

2018 ஆம் ஆண்டு கொரிய நாடுகளுக்கு இடையே போடப்ப ட்ட ஒப்பந்தத்தின் படி டி மிலிட் டரைஸ்டு சோன் எனப்படும் இராணுவ விலக்கு அளிக்கப்ப ட்ட இரு நாட்டிற்கும் பொதுவான பரஸ்பர பகுதியில் ஒரு நாடு மட்டும் தன்னிச்சையாக படை களை குவிக்கக்கூடாது.

டி மிலிட்டரைஸ்டு சோனில் படைகளை குவிப்போம் என வடகொரியா தெரிவித்துள்ள தால் தற்போது கொரிய தீபகற் பத்தில் போர்ப்பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

இதேவேளை வடகொரியா வின் மிரட்டலை சமாளிக்க இரா ணுவம் தயாராக உள்ளதாக தென்கொரியா தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (2)

வ விலக்கு அளிக்கப்பட்ட இரு படைகளை குவிப்போம் என ரிய தீபற்பத்தில் போர் மேகம்

இரா
பொது
தியில்
தவர்க
பேச்சு
தென்
லும்.
பவும்
தென்
ாரியா
ள்ள

ஹேசாங் நகரின் டி மிலிட்ட ரைஸ்டு சோன் எனப்படும் இரு நாட்டுக்கும் பொதுவான பரஸ்பர பகுதிகளில் படைகளை குவிக்கப்போவதாக வடகொரியா எச்சரிக்கை விடுத் துள்ளது. மேலும், அங்கு இராணுவ சோதனைச்சாவடிகளை அமைக்கப் போவதாகவும் மிரட்டல் விடுத்துள்ளது.

வடகொரியாவின் இந்த நடவடிக் கைக்கு தென்கொரியா கடும் கண்ட னம் தெரிவித்துள்ளது. மேலும், அனைத்தையும் சகித்துக்கொண்டு இருக்க முடியாது எனவும் தென்கொ

அவுஸ்திரேலியாவில் ஆண்டு இறுதிவரை எல்லையை மூடுவதற்கு தீர்மானம்

சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(சிட்னி)

அடுத்த ஆண்டு வரைக்கும் அவுஸ்திரேலியாவின் எல்லை மூடப்பட வாய்ப்பு என்று அந் நாட்டின் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து தப்பிக்க உலக நாடுகள் அனைத்தும் எல்லைகள் மூடி ஊரடங்கினை அமுல்படுத்தின. ஆனாலும், கொரோனாப் பாதிப்பு அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

நியூசிலாந்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட

அனைவரும் சிகிச்சை முடிந்து வீடு திரும்பினர். தற்போது வெளிநாட்டைச் சேர்ந்த இர ண்டு பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது. இதனால் எல்லைகளை கண்காணிக்க அந்நாட்டு பிர தமர் உத்தரவிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் இது வரை 7,370 பேர் கொரோ னாத் தொற்றால் பாதிக்கப்பட்டு ள்ளனர். இவர்களில் 102 பேர் உயிரிழந்தனர், 6,859 பேர் குணமடைந்துள்ளனர். கொரோ னாப் பரவலை கிட்டத்தட்ட கட்டுப்படுத்தினாலும் அடுத்த ஆண்டுவரை எல்லையைத் திறக்க வாய்ப்பில்லை என்று அவுஸ்திரேலியா சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்துள் ளார். (2)

போரிஸ் பயணித்த கார் விபத்து; அதிர்ஷ்டவசமாக காயங்களின்றி தப்பினார்

(லண்டன்)

இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோண்சன் பயணம் செய்த கார் மீது மற்றொரு கார் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக பிரதமர் உட்பட யாருக்கும் எந்த வித காயமும் ஏற்படவில்லை.

இங்கிலாந்து நாட்டின் பாரா ளுமன்ற வளாகத்திற்கு வெளியே நேற்று முன்தினம் சில குழுக் கள் போராட்டம் நடத்தின. குர்திஷ் ஆதரவு குழுக்கள், பிரக்ஸிட் எதிர்ப்புக் குழுக்கள் எனப் பல தரப்பினரும் குறை வான பங்கேற்பாளர்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்த னர்.

போராட்டங்கள் நடைபெற்று வந்தாலும் பாராளுமன்றம் வந்திருந்த பிரதமர் போரிஸ் ஜோண்சன் அங்குள்ள பணி களை முடித்துக்கொண்டு தனது பிரதமர் அலுவலகத்திற்கு காரில் புறப்பட்டார்.

பிரதமர் ஜோன்சனின் கார் பாராளுமன்றத்தை விட்டு வெளியே வந்தபோது அங்கு கூடியிருந்த போராட்டக்காரர்க

ளில் ஒருவர் பிரதமரின் காரை வேகமாக சென்று இடைமறித் தார். அப்போது பின்னால் வந்து கொண்டிருந்த பாதுகாப்பு படை யினரின் வாகனம் எதிர்பாராத விதமாக பிரதமரின் கார் மீது வேகமாக மோதியது.

இந்த மோதலில் பிரதமர் பயணித்த காரின் பின்பகுதி பலத்த சேதமடைந்தது. இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக காரில் இருந்த பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கு எந்தவித காய மும் ஏற்படவில்லை.

இதையடுத்து, அங்கு விரை ந்த பாதுகாப்பு படையினர் பிரத மர் சென்ற காரை இடைமறித்து விபத்து ஏற்படக் காரணமாக இருந்த அந்த போராட்டக்கா ரரை கைது செய்தனர்.

பிரதமர் போரிஸ் ஜோன்சன் பயணம் செய்த கார் விபத்துக் குள்ளான சம்பவம் அங்கு பரப ரப்பை ஏற்படுத்தியுள்ளது. (2)

ஆப்கானில் பயங்கரவாதிகள் தாக்குதல் 17 இராணுவ வீரர்கள் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இராணுவ முகாம்கள் மீது பயங்கரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலில் இராணுவ வீரர்கள் 17 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளுக்கும் அந்நாட்டு இராணுவத்துக்கும் இடையிலான மோதல் நாளுக்குநாள் தீவிரமடை ந்து வருகிறது. இராணுவ முகாம் கள், சோதனைச் சாவடிகள் உள் ளிட்டவற்றை குறிவைத்து தலிபான் பயங்கரவாதிகள் தொடர்ந்து தாக்கு தல் நடத்தி வருகின்றனர்.

அவர்களுக்கு இராணுவ வீரர்கள் தக்க பதிலடி கொடுத் திருக்கிறார்கள். இந்த நிலை யில் அந்த நாட்டின் வடக்குப் பகுதியிலுள்ள ஜாவ்ஷான் மாகாணத்தில் பாலாகிஷார் என்ற இடத்தில் உள்ள இரா ணுவ முகாம் மீது தலிபான் பயங்கரவாதிகள் திடீர் தாக்கு தல் நடத்தினர். அதில் 17 இரா ணுவ வீரர்கள் உயிரிழந்த னர். (2)

கறுப்பின வாலிபர் கொலை விவகாரம்; பொலிஸ் துறையில் சீர்திருத்தம்

ட்ரம்ப் உத்தரவு

(வோஷிங்டன்)

கறுப்பின வாலிபர் கொல் லப்பட்ட விவகாரம் தொடர்பாக பொலிஸ் துறையில் சீர்திருத்தம் கொண்டு வந்து அதற்கான நிர் வாக உத்தரவை ட்ரம்ப் நேற்று முன்தினம் பிறப்பித்தார்.

அமெரிக்காவில் கைது நட வடிக்கையின்போது ஜோர்ஜ் ஃ பிலாய்ட் என்ற கறுப்பின வாலி பரின் கழுத்தில் பொலிஸார் ஒருவர் தனது கால் முட்டியால் அழுத்தியதில் அந்த வாலிபர் உயிரிழந்தார். இதைக் கண்டி த்து, அமெரிக்கா முழுதும் போரா ட்டங்கள் நடந்து வருகின்றன.

பொலிஸாருக்கு எதிரான போராட் டங்களால், பல மாகாணங்க ளில் சட்டம், ஒழுங்கு சீர்குலை ந்துள்ளது.

பொலிஸாரும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து அண்மையில் பேசிய அந்த நாட்டின் ஜனாதிபதி ட்ர ம்ப், நெருக்கடியான சூழலை எதிர்கொண்டு வரும் பொலி ஸாரை ஊக்குவிக்கும் வகை யில், பொலிஸ்துறையில் சீர் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்றும் அதற்கான நிர்வாக உத்தரவு விரைவில் பிறப்பிக்கப் படும் என்றும் கூறினார். அதன் படி பொலிஸ் துறையில் சீர்திரு த்தம் கொண்டு வந்து அதற்கான நிர்வாக உத்தரவை ட்ர ம்ப் நேற்று பிறப்பித்தார்.

இதுகுறித்து ட்ரம்ப் பேசு கையில் "பொலிஸ் அதிகாரி உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் தவிர வேறு எந்தச் சமயத்திலும் கைதாகும் நபரின் கழுத்தை நெரிப்பது தடை செய்யப்படு கிறது. பொலிஸ் அதிகாரிகள் ஆபத்து குறைவான ஆயுதங் களைப் பயன்படுத்துவது குறி த்து எனது அரசாங்கம் கவனி த்து வருகிறது. அதேசமயம் பொலிஸ் அதிகாரிகளின் பாது காப்பும் மிகவும் அவசியம்" எனவும் தெரிவித்தார். (2)

மைத்திரி மறைத்தவர்களை கோட்டா வெளியிட வேண்டும்

ஜே.வி.பி.கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மறைக்கப்பட்ட 106 நபர்களதும் பெயர்கள் உள்ளடங்கிய பட்டியலை வெளியிடும்படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஜே.வி.பியின் மத்திய செயற்குழு உறுப்பினரான வசந்த சமரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் மறைக்கப்பட்ட 106 பேரின் பெயர்கள் உள்ளடங்கிய பட்டியலை வெளியிட வேண்டும்.

இந்த அறிக்கையை அம்பலப்படுத்தாமல் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளைத் திட்டித் தீர்ப்பதில் எந்தவிதப் பயனும் இல்லை.

மத்திய வங்கி ஊழலை மேற்கொண்ட பிரதான சந்தேக நபராக அடையாளப்படுத்தப்பட்டுள்ள அர்ஜுன் மகேந்திரனிடமிருந்து கோடிக்கணக்கான பணத்தைப் பெற்றுக்கொண்ட 106 பேருடைய

பெயர்ப்பட்டியலை உடனடியாக ஜனாதிபதி வெளியிட வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தினார். (ஜ-4)

அறிவுறுத்தல்களை பின்பற்றாமையே சைபர் தாக்குதலுக்கு காரணமாகும்

பாதுகாப்புச் செயலாளர் கமால் விளக்கம்

(கொழும்பு)

அரச நிறுவனங்களின் இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ன விளக்கியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் விளக்கமளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அண்மையில் அரச இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.



இலங்கை கணனி அவசர தயார்நிலை குழு வழங்கிய அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமை காரணமாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், சைபர் தாக்குதல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் இலங்கை கணனி அவசர தயார் நிலை குழு வழங்கியதாகவும் எனினும் பெரும்பாலான அரச நிறுவனங்கள், திணைக்களங்கள் அதனைப் பின்பற்றியுள்ளன. சில அரச நிறுவனங்கள் அதனை பின்பற்றியிருக்கவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இவ்வாறு அறிவுறுத்தல்களை பின்பற்றாமையின் காரணமாகவே குறித்த திணைக்களங்கள் சைபர் தாக்குதலுக்கு இலக்கானதாக சுட்டிக்காட்டிய அவர் எவ்வாறாயினும், இலங்கையில் இணைய பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கை கணனி அவசர தயார்நிலை குழு உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

நியூசிலாந்து தேர்தலில் இலங்கைப் பெண்

(கொழும்பு)

இலங்கையின் புகழ் பெற்ற அரசியல் குடும்பம் ஒன்றைச்சேர்ந்த வனுஷி வோல்ட்டேர்ஸ் எதிர்வரும் செப்டெம்பர் 19 ஆம் திகதி நியூசிலாந்தில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தொழிற்கட்சியின் சார்பில் போட்டியிட வுள்ளார். இவரை வேட்பாளராகக் களமிறக்குவதற்கான அங்கீகாரத்தை தொழிற்கட்சி வழங்கியுள்ளது.

ஆக்லாந்தில் போட்டியிடவுள்ள இவர், தேர்தலில் தெரிவு செய்யப்பட்டால் நியூசிலாந்து பாராளுமன்றத்தில் அங்கம்

வகிக்கும் இலங்கையில் பிறந்த முதலாவது உறுப்பினர் என்ற பெருமையைப் பெறுவார். (ஜ-4)

இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

கண்ணாடி தேவை இல்லை

ஒரு நண்பரை தேடிக்கொண்டு போனேன். ரொம்ப நாட்கள் ஆச்சு அவரைப் பார்த்து. அதனால் பார்த்து பேசிவிட்டு வரலாம் என்று நினைத்துக்கொண்டு போனேன். நான் போகும் போது அவர் வீட்டு வாசலிலே தான் நின்று கொண்டு இருந்தார். தூரத்திலே நான் அவரை பார்த்து விட்டேன். இரண்டு கைகளையும் தூக்கி 'வணக்கம்' என்று சொல்லிக்கொண்டு நெருங்கினேன். அவர் அதை கண்டு கொள்ளவே இல்லை. அவர் பாட்டுக்கு நின்று கொண்டு இருந்தார்.

நான் பக்கத்திலே போனதும் உற்றுப் பார்த்து விட்டு ''அடடே நீங்களா மன்னிக்கவும் தூரத்திலே வரும் போது உங்களுடைய முகம் எனக்கு சரியாக தெரியவில்லை'' என்றார். இந்த அனுபவம் பல பேருக்கு ஏற்பட்டு இருக்கலாம். இதற்கு என்ன காரணம்? மையோப்பியா (myopia) அதாவது குறும்பார்வைக் குறைபாடு.

குறும்பார்வைக் குறைபாடு என்றால் அருகில் உள்ளது நன்றாகத்தெரியும். தூரத்தில் உள்ளது நன்றாகத் தெரியாது.

ஒரு பொம்மையைப் பார்க்கின்றோம். அதில் இருந்து வரும் ஒளிக்கதிர்கள் நம் கண் வழியாக உள்ளே போகின்றது. கண் ணுக்கு மேலே முன்புறம் உள்ளது விழிவெண்படலம் cornea! அது வழியாக உள்ளே போய் அங்கு உள்ள திரையில் விழுகின்றது. அந்தத் திரைக்குப் பெயர் தான் ரெட்டினா (retina) விழித்திரை.

விம்பம் திரையிலே சரியாக விழுந்தால் பார்வை நன்றாக இருக்கும் என்று அர்த்தம். நாங்கள் பார்க்கின்ற எல்லாம் 'பளிச்' என்று தெரியும். குறும்பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு இந்த விம்பம் திரையிலே விழுவதற்குப் பதிலாக அதற்கு கொஞ்சம் முன்னரே விழுந்து விடும். அதனால் பார்க்கின்ற பொருள் தெளிவாகத் தெரியாது.

இதைச் சரி செய்வதற்கு இதுவரைக்கும் என்ன செய்து கொண்டு இருந்தோம்? கண்ணாடி (spectacle) போட்டுக்கொள்வோம். இல்லை என்றால் கொன்டாக்ட்லென்ஸ் (contact lens) பொருத்திக்கொள்வோம். அதாவது ஒட்டுக்கண்ணாடி வில்லை. இப்பொழுது கண்ணாடி இல்லாமலே பார்வையை சரி செய்வதற்கு ஒரு வசதி வந்திருக்கின்றது.

அதுதான் எக்ஸைமர் லேசர் விழிவெண்படல ஒளிக்கதிர் சிதறல் அறுவைச் சிகிச்சை (excimer laser photo refractive keratectomy - prk) இது எப்படி என்றால் விழிவெண்படலத்தின் நடுப்பகுதியிலே மேலெழுந்த வாரியான 10 முதல் 20சத வீதம் வரை பருமனை நீக்கி விடுகின்றது.

இன்னொரு முறை எப்படி என்றால் அது விழிவெண்படல ஆர அறுவை சிகிச்சை – radial keratectomy! விழிவெண்படலத்தின் பருமமான மேற் பகுதியை 95 முதல் 99 சதவீதம் வரை – 4 முதல் 8 ஆரங்களாக வெட்டி செதுக்கி நடுப்பகுதியை சமப்படுத்துகின்ற அறுவைச்சிகிச்சை இது.

ஒளிக்கதிர் சிதறல் அறுவைச்சிகிச்சை என்பது பதினைந்து நிமிடத்திலே முடிந்து விடும். வைத்தியசாலையிலே நாங்கள் தங்கி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அன்றே வீட்டுக்குப்போய் விடலாம். நமக்கு அறுவை சிகிச்சை நடக்கும் போது நாங்கள் விழித்திருக்க முடியும். வலி இருக்காது. கண்ணுக்கு மட்டும் தற்காலிகமாக மரத்து போவதற்கு மருந்து விடுவார்கள்.

லேசர் கருவியை மேல் நோக்கிப் பார்க்கின்ற மாதிரி நாங்கள் படுத்துக் கொள்ள வேண்டும். வைத்தியர் என்ன செய்வார் என்றால் நமக்குத் தேவையான ஒளி விலகல் திருத்தத்தை (refractive correction) லேசர் கருவியின் கம்ப்யூட்டரிலே பதிவு செய்து கொள்வார். கண் இமைக்காமல் இருப்பதற்கு ஸ்பெகுலம் என்கின்ற கிளிப்பை பொருத்தி விடுவார். அதற்குப்பிறகு மிகவும் இலேசாக விழிவெண்படலத்தின் மேல் இழை திசுக்களை (Epithelium) நீக்கிவிடுவார். கண் ணுக்கு ஒரு கட்டு. அவ்வளவுதான் வேலை. பிறகு வீட்டுக்கு வரலாம். இதுதான் prk சிகிச்சை. அதாவது ஒளிக்கதிர் சிதறல் அறுவைச் சிகிச்சை. விஞ்ஞானம் வளரும் வேகத்தை பார்த்தீர்களா? இனிமேல் எல்லாம் சத்திரசிகிச்சைக்கும் கத்திக்கும் சம்பந்தமே இல்லை. அதனால் அறுவைச் சிகிச்சை என்பதற்கே வேறு வார்த்தையை கண்டுபிடிக்க வேண்டும். ஏன் என்றால் சிகிச்சையிலே அறுவையே இல்லையே கத்தியும் இன்றி இரத்தமும் இன்றி சுதந்திரமும் என்கிறது மாதிரி கத்தியின்றி இரத்தமும் இன்றி சத்திர சிகிச்சை.

அதனால் இனிமேல் சத்திரசிகிச்சை என்றால் யாரும் பயப்பட வேண்டாம். ஒரு நோயாளி அப்படித்தான் வைத்தியசாலையிலே இருந்து தப்பி வெளியே ஓடி வந்தான். வாசலிலே இருந்தவர் ஏன் ஐயா இப்படி பயந்து கொண்டு ஓடி வருகிறீர்கள்? என்று கேட்டார். ''எனக்கு இன்றைக்கு சத்திரசிகிச்சை. அது தான் பயந்து கொண்டு ஓடிவருகின்றேன்'' என்றார் அந்த ஐயா.

''அதில் என்ன பயம்? இப்ப அது எல்லாம் சுலபம்'' என்றார் இவர். 'நான் சத்திரசிகிச்சைக்காக பயப்படாமல் துணிச்சலாகத் தான் இருந்தேன். தாதியர் சொன்னதைக்கேட்டதும் தான் பயம் வந்து விட்டது'' என்றார் அவர். ''என்ன சொன்னார் தாதியர் அம்மா?'' என்று கேட்டார்.

'இது ஒரு சின்ன சத்திரசிகிச்சை தான். பயப்படாதீர்கள் தைரியமாக இருங்கள் என்று சொன்னார்கள்'' என்றார். 'அப்படி சொன்னதுக்குப்பிறகு உங்களுக்கு என்ன பயம்?'' என்றார். ''ஐயோ... அந்த தாதியர் அம்மா அப்படி சொன்னது என்னிடம் இல்லைசேர்... சத்திரசிகிச்சை செய்யப்போகின்ற வைத்தியரிடம்'' அப்படி என்றார் அந்த மனிதர்.

புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு 02

கலாநிதி முருகர் குணசிங்கம்

சில புலம்பெயர்வுகள் பொருளாதார மேம்பாடு, வேலை வாய்ப்பு, உயர் கல்வி உள்ளிட்ட காரணங்களுக்காகத் தனிநபர்களின் விருப்பப்படி மேற்கொள்ளப்படுகின்றன. வேறு சில புலம்பெயர்வுகளோ உள்நாட்டுப்போர், இன ஒடுக்குமுறை, மதச் சீரழிப்பு, கொடுங்கோன்மை, அரச பயங்கரவாதம் முதலிய காரணங்களால் கட்டாயப்படுத்தப்பட்டு அவர்களின் விருப்பத்தை மீறி நிகழ்கின்றன.

ஆபிரிக்க வழித்தோன்றல்களான கறுப்பர்கள், புதிய உலகம் என்று அழைக்கப்பட்ட அமெரிக்காவுக்கு அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்டனர். ஒட்டோமான் (Ottoman) பேரரசின் கீழ் இருந்த துருக்கியில் இனப்படுகொலைக்கு ஆளான ஆர்மீனியர்கள் நாட்டை விட்டு வெளியேறியது உள்ளிட்ட பல நிகழ்வுகள் புலம்பெயர்வு என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட ஆதிக்க எல்லை விரிவாக்க முயற்சிகள் காரணமாகவும் நாடு பிடிக்கும் ஆசையாலும் அவர்கள் கைப்பற்றி ஆட்சி புரிந்த நாடுகளில் எழுந்த விடுதலைப் போராட்டங்கள் காரணமாகவும் குடியேற்ற நாடுகள் விடுவிக்கப்பட்ட காலத்திலும் புலம்பெயர்வுகள் நிகழ்ந்தன.

இவற்றோடுகூட, உலகளாவிய முதலாளித்துவம், தொழிலாளர்களைப் பகுத்து அமைத்தது. உலகமயமாக்கல் பொருளாதாரமும் (Globalisation), பெருந்தொழில்களும் நாடுகளின் எல்லைகளைத் தாண்டி வளர்ச்சி பெற்றது. பன்னாட்டு நிதியம் (International Monetary Fund) புத்தாக்கம் பெற்றது. பண்டங்களிலும் சேவைகளிலும் மேற்கொள்ளப்பட்ட பன்னாட்டு வணிகம் ஒழுங்குபடுத்தப்பட்டது. பன்னாட்டுக் கடன் கொடுக்கல்-வாங்கல்கள் போன்ற பல்வேறு காரணங்களால் பெருமளவில் புலம்பெயர்வுகள் நிகழ்கின்றன. வரலாற்றின் தொடக்கத்தில் நடைபெற்ற இனச் சிதறல்களை ஆராய்வதன் மூலம், தற்காலத்தில் நடைபெற்ற இனச் சிதறல்கள் பற்றி நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

முதல் உலகப் போர் (1914-1918), சர்வதேசக் குழுவின் (League of Nations) தோற்றமும் மறைவும் 1935 இல் தொடங்கிய நாசிச எழுச்சி, 1950, 1960 களில் ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கக் கண்டங்களில் நடைபெற்ற குடியேற்ற எதிர்ப்பு விடுதலைப் போர்கள், ரஷ்ய-அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான பனிப்போர், பெர்லின் சுவர் உடைப்பு (1989), கம்யூனிசத்தின் மறைவு, செம்டெம்பர் 11, 2001 அமெரிக்க வணிக மையத்தின் இரட்டைக் கோபுரத் தகர்ப்பை ஒட்டிய அழிப்பு முயற்சிகள், பயங்கரவாதத்திற்கு எதிரான போர், ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் நடைபெற்று வரும் போர்கள், நாடுகடந்து நடைபெற்றுவரும் புலப்பெயர்வு நிகழ்வுகள், புலம்பெயர்வுக்கு ஆளாக்கப்படும் சமுதாயங்கள் ஆகியவை, இருபது, இருபத்தோராம் நூற்றாண்டுகளில் புவியியலில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி வரும் நிலையில், புலப் பெயர்வுகளுக்கான காரணங்களையும் விளைவுகளையும் புரிந்து கொள்ள உதவுகின்றன.

வரலாற்றில் நிகழ்ந்த புலப்பெயர்வுகளை முன்னுதாரணமாகக்கொண்டு ஆராய்வதன்மூலம் தற்காலப் புலம் பெயர்வுகளைக் குறித்த தெளிவான, முழுமையான புரிதல் ஏற்படும். அதிலும் ஆபிரிக்க, ஆர்மேனிய, சீன, இந்திய புலப்பெயர்வுகளைக் காட்டிலும் யூதப் புலம்பெயர்வினைக் கூர்ந்து நோக்குவது சிறப்பாகும். ஏனெனில் யூதர்களின் மதம், மொழி, கலாசாரம், சமூகம், அரசியல் அனைத்துமே அப்போது பாதிக்கப்பட்டன. தமிழர்களின் புலம்பெயர்வு அதனைப் பெரிதும் ஒத்து இருக்கின்றது. எனவே, இந்த ஆய்வில் மற்றப் புலம் பெயர்வுகளைக் காட்டிலும் யூதர்களின் புலம்பெயர்வு அதிக கவனத்தில் கொள்ளப்பட்டு இருக்கிறது.

யூதர்களின் புலம்பெயர்வு

ஓர் இனம் தளராத நாட்டுப்பற்றுடன் மத, இன, மொழி, கலாசார அடையாளங்களை அழிய விடாது பேணிக் காத்து நின்றதற்கு, யூதர்களுடைய வரலாறே சான்றாக விளங்குகின்றது. எத்தனையோ நூற்றாண்டுகளாகப் பல்வேறு கொடுமை

களையும் துயரங்களையும் சந்தித்த போதும் யூதர்கள் சளைக்காது தொடர்ச்சியாகப் போராடி, இறுதியாகத் தமது தாய்நாட்டை மீட்டு இருக்கின்றார்கள். இந்த வகையில், யூதர்களின் வரலாற்றை வேறு எந்த நாட்டு வரலாற்றுடனும் ஒப்பிட்டுக் காட்ட இயலாது. இன்று இஸ்ரேல் வளர்ச்சி அடைந்த உலக நாடுகளின் வரிசையில் முன்னிலையில் இருக்கின்றது. உலகெங்கும் பரந்து வாழும் யூதர்கள், அரசியல், பொருளாதாரத்தில் வலுவாக இருக்கின்றார்கள். புலம்பெயர்ந்து வாழும் யூதர்களின் வரலாறு, ஒரு வரலாற்று மாணவனுக்கு நல்லதொரு ஆய்வுக்களம் என்பதனைச் சகலரும் ஏற்றுக்கொள்வார்கள்.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பாபிலோனியர்கள் (Babylonians), யூதர்களின் பழைமையான அரசைக் கைப்பற்றி, அவர்களுடைய முதல் ஆலயத்தை அழித்த போதுதான் யூதர்களின் புலம் பெயர்வு தொடங்கியது. இந்த நிகழ்ச்சி விவிலியத்தில் (Bible) குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. கி.பி.66 இல் ரோமப் பேரரசை எதிர்த்து யூதர்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள். இதுவே, 'முதலாம் யூத-ரோமன் போர்' எனப்படுகிறது. இதன் முடிவில், கி.பி. 70 இல் யூதேயா (Judea) அழிக்கப்பட்டது.

ஜெருசலம், யூதேயா (Judea) ஆகிய பகுதிகளில் யூதர்கள் வசிப்பதை ரோமன் ஆட்சியாளர்கள் தடை செய்தனர். எனவே, யூதர்கள் மீண்டும் யூதேயாவை விட்டுச் சிதறுண்டு வெளியேறி, மத்திய கிழக்கு நாடுகள், மத்திய ஆசியா, ஐரோப்பிய நாடுகள் ஆகிய இடங்களில் சரண் புகுந்தனர். போர் முற்றுகையின்போது ரோமன் ஆட்சியாளர்கள் யூதர்களின் இரண்டாம் கோவிலையும் ஜெருசலத்தின் பெரும் பகுதியையும் அழித்து விட்டார்கள். கி.பி.132 ஆம் ஆண்டில் யூதர்கள் ஹெட்ரியனுக்கு (Hadrion) எதிராகக் கிளர்ந்து எழுந்தார்கள். 135 ஆம் ஆண்டில், ஹெட்ரியனின் படை, யூதர் படைகளைத் தோல்வியுறச் செய்தது. யூதர்களின் சுதந்திரம் அத்தோடு பறிபோனது. ஜெருசலேம் நகரம் ஈலியா காப்பிட்டோலீனா (Aelia Capitolina) எனப் பெயர் மாற்றம் பெற்றது. யூதர்கள் அங்கே வாழ்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. 'யூதேயா' என்ற நாட்டின் பெயரும் 'பாலஸ்தீனம்' என்று மாற்றப்பட்டது. கி.மு.நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இஸ்ரேல் நாட்டை விட அதற்கு வெளியேதான் அதிகப்படியான யூதர்கள் வாழ்ந்தார்கள்.

கி.மு.ஆறாம் நூற்றாண்டு முழுவதும் பாபிலோனியப் பேரரசை ஆட்சி செய்தவர்கள், விரும்பியோ, விரும்பாமலோ அங்கு தஞ்சம் புகுந்த இனங்களுடன் சகிப்புத் தன்மையுடன் நடந்து கொண்டார்கள். எனவே பாபிலோனில் மட்டுமன்றி அதற்கு அப்பாலும் ஐரோப்பிய நாடுகள் முழுவதும் யூத சமுதாயத்தினர் பரவலாக வாழ்ந்து வந்தார்கள்.

கி.பி.1095 ஆம் ஆண்டு யூதர்களிடம் இருந்து முற்றும் முழுவதுமான புனித பூமியைக் கைப்பற்றுவதற்காக சிலுவைப் போர் தொடங்குமாறு போப் ஆண்டவர் ஆணையிட்டார். அதன் காரணமாக யூதர்களையும் அவர்களின் பழக்கவழக்கங்களையும் ஐரோப்பியர்கள் வெறுக்கத் தொடங்கினார்கள். ஜேர்மனியிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் யூதர்களுக்கு எதிராகக் காட்டுமிராண்டித்தனமான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

மத்திய காலம் முழுவதும் யூதர்கள், ஐரோப்பியரின் கொடுமைகளுக்கு உள்ளானவர்கள் தனிமைப்படுத்தப்பட்டார்கள், வெளியேற்றப்பட்டார்கள். 1290 ஆம் ஆண்டு இங்கிலாந்து அவர்களை வெளியேற்றியது. 1306 இல் பிரான்ஸ் வெளியேற்றியது. தொடர்ந்து ஸ்பெயின், போர்த்துக்கல், இத்தாலி, போலந்து ஆகிய நாடுகள் யூதர்களை வெளியேற்றின. சுமார் பத்து இலட்சம் யூதர்கள் ஸ்பெயினில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். பெரும்பாலானவர்கள் மொறாக்கோ, அல்ஜீரியா, டுனிசியா, மற்றைய மத்திய தரைக் கடல் நாடுகள் தொடங்கி ரஷ்யா வரை சென்று அடைக்கலம் புகுந்தார்கள். மற்றொரு பகுதியினர் ஐரோப்பிய நாடுகளிலேயே தங்கி இருந்தனர். பல நாடுகளில் யூதர்கள் மீதான இனவெறியும் உரிமை மறுப்பும் பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதிவரை தொடர்ந்தது.

அமெரிக்கா 1789 ஆம் ஆண்டிலும் பிரான்ஸ் 1791 இலும் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் யூதர்களுக்கு உரிமைகளை வழங்கின. ரஷ்யா 1917 புரட்சிகளுக்கப் பின்னரே வழங்கியது. அதற்குப் பின்னரும்கூட யூதர்களின் துன்பங்கள் முடிவுக்கு வரவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பிய நாடுகளில் தேசிய உணர்வும் அத்தோடு இனத்தூய்மை குறித்த உணர்வுகளும் உருவாகின. வெள்ளை இனம் உயர்ந்தது என்ற எண்ணம் ஏற்பட்டது. யூத எதிர்ப்பு இனவெறிக் கொள்கையைக் குறிக்கும் "அன்டி செமிட்டிசிசம்" (Anti Semiticism) என்னும் சொல் ஐரோப்பாவில் முதன் முறையாக 1870 களில் பயன்படுத்தப் பட்டது. அதுமுதல் "ஐரோப்பிய தேசியம்" என்ற பெயரில் யூதர்களைக் கொடுமைப் படுத்தும் செயல்கள் தங்குதடையின்றித் தொடர்ந்தன. இவை உச்ச நிலைக்கு வந்தது ஜேர்மனியில் ஆகும்.

அந்நாட்டில் நாசிசக் கொடுமை இமயமென வளர்ந்து நின்றது. 1930-1940 களில் மேற்கொள்ளப்பட்ட பேரழிவுச் செயல்கள், அறுபது இலட்சம் ஐரோப்பிய யூதர்களை அறவே அழித்து ஒழிக்கக் காரணமாயின. யூத எதிர்ப்பு வெறி காரணமாக தங்களைச் சேராதவர்கள் உயிர் வாழவே கூடாது என்ற கொடிய எண்ணத்தால் அதற்கான செயற்றிட்டங்கள் வகுக்கப்பட்டு யூதர்களை அடியோடு ஒழிப்பதே குறிக்கோள் என்று செயற்படுத்தப்பட்டன.

இத்தகைய யூத எதிர்ப்புக் கோட்பாட்டுக்கு எதிர்வினையாக யூதர்களின் தாயகத்தை மீட்டெடுக்க வேண்டும் என்ற சியோனிசம் (Zionism) என்னும் கோட்பாடு 1890 களில் உருப்பெற்று வளர்ச்சியுறத் தொடங்கியது. எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டு பணியாற்றிய தியொடர் ஹெர்ஸ் (Theodor Herzl) என்பவர் மதப்பற்று, நிறவெறி, உரிமை மறுப்புக் கொடுமை என்ற எதுவும் தலைக்காட்டாத மதச்சார்பு அற்ற நாடு ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் 1897 ஆம் ஆண்டில் "சியோனிஸ்ட்" இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

யூதர்களுக்கென ஒரு தேசியத் தாயகத்தை உருவாக்குவது என்ற பிரகடனத்தை 1917 நவம்பர் 2 ஆம் திகதியன்று பால்ஃபோர் (Balfour) வெளியிட்டார். அதன் விளைவாக, ஐரோப்பா, ரஷ்யா, மத்திய ஆசியா, வட அமெரிக்கா விற்குப் புலம்பெயர்ந்து சென்று இருந்த யூதர்களில் சிறு தொகையினர் தாயகத்திற்குத் திரும்பி வந்தனர். முதலாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது. துருக்கியில் ஒட்டோமான் பேரரசும் வீழ்ச்சி அடைந்தது. தங்கள் குறிக்கோளை நிறைவேற்றப் போராடிய யூதர்கள், 1948 ஆம் ஆண்டு "இஸ்ரேல்" எனும் தாயகத்தை நிறுவினார்கள்.

இருப்பினும் இன்றைக்கும் இஸ்ரேலுக்கு வெளியே மத்திய கிழக்கு, வடக்கு ஆபிரிக்கா, குறிப்பாக ஈரான், துருக்கி, மொறாக்கோ, டுனிசியா, மேலும் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் யூதர்கள் பெருமளவில் வாழ்கின்றனர்.

(தொடரும்)

வடமாகாணத்தில் அரச திணைக்களங்களினால் காணிகள் கையடக்கலும் மக்களின் காணிப் பிரச்சினையும் - ஒரு பார்வை

03

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

இம் மதிப்பீட்டு ஆய்வின் முடிவில் வனஜீவராசி பாதுகாப்பு திணைக்களத்தால் பின்வரும் பிரதேசங்கள் அதில் குறிப்பிட்ட தேவைகளுக்காக வனஜீவராசி பாதுகாப்பு திணைக்களத்திற்கு ஒதுக்குவதற்கு சிபாரிசு செய்யப்பட்டது.

1. யானை இடம்பெயர்வு, பல்லுயிர் பாதுகாப்பு போன்ற வற்றிற்காக வில்பத்து தேசிய பூங்கா மற்றும் மடு றோட் சரணாலயம் ஆகியவற்றுக்கு இடையே நடைபாதை.

2. யானை இடம்பெயர்வு, பல்லுயிர் பாதுகாப்பு போன்றவற்றிற்காக மடு றோட் மற்றும் கட்டுக்கரைக் குளம் சரணாலயங்களை நீந்தவில் வன ஒதுக்கீட்டு டன் இணைக்கும் நடைபாதை.

3. புலம்பெயர்ந்து வரும் மற்றும் வசிக்கும் பறவைகளின் போசனை, பாதுகாப்பு, ஈரநில பாது காப்பு, முக்கியமாக சதுப்புநில தாவரங்களை வளர்ப்ப தற்காக விடத்தல்தீவு சரணாலயம்.

4. பல்லுயிர் பாதுகாப்பு, பறவைகள் இடம்பெய ர்வு பாதை, ஈரநிலப் பாதுகாப்பு, இலங்கையில் காட்டு குதிரை (wild ponies) காணக்கூடிய ஒரே இடம் இவற்றைப் பாதுகாப்பதற்கான நெடுந்தீவு தேசிய பூங்கா.

5. முக்கியமான பறவை இடம்பெயர்வு பாதை, (கடல்) பல்லுயிர் பாதுகாப்பு போன்றவற்றிற்கு இந்தி யாவுடன் இணைக்கும் ஆதாம் பால எல்லையின் இயற்கை ஒதுக்கீடு.

6. புலம்பெயர்ந்து வரும் மற்றும் வசிக்கும் பறவைகளின் போசனை, பாதுகாப்பு, ஈரநில பாது காப்பு, முக்கியமாக சதுப்புநில தாவரங்களை வளர்ப்ப தற்காக யாழ்ப்பாணம் களப்பு சரணாலயம்.

7. புலம்பெயர்ந்து வரும் மற்றும் வசிக்கும் பறவைகளின் போசனை, பாதுகாப்பு, ஈரநில பாது காப்பு, முக்கியமாக சதுப்புநில தாவரங்களை வளர்ப்ப தற்காக கரவெட்டி-நாகர்கோவில் சரணாலயம்.

8. யானை இடம்பெயர்வு, பல்லுயிர் பாதுகாப்பு போன்றவற்றிற்காக நாகபடுவான், நீந்தவில் மற்றும் அக்கராயன் ஆகிய வன ஒதுக்கீடுகளை ஒன்றுடன் ஒன்று இணைப்பதற்கான நடைபாதை.

9. புலம்பெயர்ந்து வரும் மற்றும் வசிக்கும் பறவைகளின் போசனை, பாதுகாப்பு, ஈரநில பாதுகா ப்பு, முக்கியமாக சதுப்புநில தாவரங்களை வளர்ப் பதற்காக சுண்டிக்குளம் சரணாலயத்தை யானை இறவு நோக்கி (மேற்கு நோக்கி) மற்றும் களப்புக்கள் உட்பட சாலை (Chalai) மற்றும் பள்ளமாதலன் (Pallamatalan) நோக்கி (தென்கிழக்கு நோக்கி) விரிவுபடுத்துதல். மற்றும் சுண்டிக்குளம் சரணால யத்தை தேசிய பூங்காவாக தரம் உயர்த்தல்.

10. புலம்பெயர்ந்து வரும் மற்றும் வசிக்கும் பற வைகளின் போசனை, பாதுகாப்பு மற்றும் ஈரநில பாது காப்பு போன்றவற்றிற்காக நந்திக்கடல் சரணாலயம்.

11. புலம்பெயர்ந்து வரும் மற்றும் வசிக்கும் பற வைகளின் போசனை, பாதுகாப்பு, ஈரநில பாதுகாப்பு, முக்கியமாக சதுப்புநில தாவரங்களை வளர்ப்பதற்காக நாயாறு களப்பு உள்ளிட்ட கொக்கிளாய் சரணால யத்தின் விரிவாக்கம்.

12. யானை இடம்பெயர்வு, பல்லுயிர் பாதுகாப்பு போன்றவற்றிற்காக நைனமடு வன ஒதுக்கீடு (Nain amaduF.R) மற்றும் சாமலன்குளம் (Chamalan kulum F.R) இடையே நடைபாதை.

13. யானை இடம்பெயர்வு, பல்லுயிர் பாதுகாப்பு போன்றவற்றிற்காக ஆண்டான்குளம் மற்றும் நைன மடு வன ஒதுக்கீடுகளை பதவியாக் குளம் சரணா லயத்துடன் இணைப்பதற்கான நடைபாதை.

14. புலம்பெயர்ந்து வரும் மற்றும் வசிக்கும் பற வைகளின் போசனை, பாதுகாப்பு, ஈரநில பாதுகாப்பு, நீரேந்தும் நீர்த்தேக்க பாதுகாப்பு போன்றவற்றிற்காக அபிவிருத்தி அடைந்த பகுதிகளைத் தவிர்த்து அருகி

வனஜீவராசி பாதுகாப்பு பிரதேசம் 2010 - வடமாகாணம்



மதிப்பீட்டு ஆய்வின் முடிவில் சிபாரிசு செய்யப்பட்ட மொத்த வனஜீவராசிகள் பாதுகாப்பு பிரதேசம்.



லுள்ள வனப்பகுதிகள் உள்ளடங்க வவுனிக்குளம் சர ணாலயத்தை மீள உருவாக்குதல்.

15. யானை இடம்பெயர்வு, பல்லுயிர் பாதுகாப்பு போன்றவற்றிற்காக அபிவிருத்தி அடைந்த பகுதிகளைத் தவிர்த்து மடு றோட் சரணாலயம் உள்ளடங்கலாக மடு றோட் தேசிய பூங்காவை உருவாக்குதல்.

16. புலம்பெயர்ந்து வரும் மற்றும் வசிக்கும் பறவைகளின் போசனை, பாதுகாப்பு, ஈரநில பாதுகாப்பு, முக்கியமாக சதுப்புநில தாவரங்களை வளர்ப்பதற்காக தொண்டவேலி சரணாலயம் உருவாக்குதல்.

17. புலம்பெயர்ந்து வரும் மற்றும் வசிக்கும் பறவைகளின் போசனை, பாதுகாப்பு, ஈரநில பாதுகாப்பு போன்றவற்றிற்காக ஊர்காவற்றுறைக்கு அருகில் உள்ள பருத்தித்தீவு (Paratitivu) சரணாலயத்தை தேசிய பூங்காவாக தரம் உயர்த்தல்.

இக் குழு 2014 ஆம்ஆண்டு "Integrated Strategic Environmental Assessment of the Northern Province of Sri Lanka" என்ற அறிக்கையை வெளி யிட்டது. அவ் அறிக்கையில் வனஜீவராசி பாதுகாப்பு திணைக்களத்தின் தகவலின்படி 2010 இல் வடமாகா ணத்தில் மொத்தமாக 43,497 ஹெக்டேயர் பிரதேசம் வனஜீவராசி பாதுகாப்பு பிரதேசமாக இருந்துள்ளது. அதில் 6037 ஹெக்டேயர் பிரதேசம் யாழ்ப்பாண மாவட் டத்திலும் 5031 ஹெக்டேயர் பிரதேசம் கிளிநொச்சி மாவட்டத்திலும் 10,256 ஹெக்டேயர் பிரதேசம் முல்லைத் தீவு மாவட்டத்திலும் 22,173 ஹெக்டேயர் பிரதேசம் மன்னார் மாவட்டத்திலும் காணப்பட்டது.

(தொடரும்...)

சி.ஐ.டியின் புதிய இயக்குநரை கைது செய்யவும்

லசந்தவின் மகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு கடிதம்

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பாக சி.ஐ.டியின் புதிய இயக்குநருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் உள்ளதாக லசந்த விக்ரமதுங்கவின் மகள் அகிம்சா விக்ரமதுங்க சுட்டிக்காட்டியதுடன் அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கான நடவடிக்கையினை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அவர் கடிதமொன்றை எழுதியுள்ளார். குறித்த கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது. "எனது தந்தை லசந்த விக்ரமதுங்க 2009 ஜனவரி மாதம் அத்திடியவில் கொலை செய்யப்பட்டார். அவரது கொலை குறித்து சி.ஐ.டியினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

2010 இல் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் (ரி.ஐ.டியின்) பொறுப்பதிகாரியாக செயற்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.ஆர்.பிரசன்ன ஜே.அல்விஸ் எனது தந்தையை கொலை செய்தவர்களை தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்காக ஆதாரங்களை மறைத்து சந்தேகநபர்களைக் காப்பாற்றினார் என 2019 ஒக்டோபரில் சி.ஐ.டியினர் கல்கிஸை நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறான குற்றங்களிற்கு ஏழு வருட சிறைத்தண்டனையை வழங்கலாம். இதனைத் தொடர்ந்து பதில் பொலிஸ்மா அதிபர் அல்விஸை கைது செய்து நீதவான் முன்னிலையில் ஆஜராக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பதில் பொலிஸ்மா அதிபர் திடீரென தனது மனதை மாற்றிக்கொண்டார். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அல்விஸ் அதன் பின்னர் கைது செய்யப்படவில்லை. நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுமில்லை.

மாறாக மே 21 ஆம் திகதி சி.ஐ.டியின் புதிய இயக்குநராக அல்விஸை நியமிப்பதை அங்கீகரிக்குமாறு அரசாங்கம் விடுத்த வேண்டுகோளினை தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டது.

கொலை சந்தேகநபர் என்ற அடிப்படையில் அல்விஸை கைது செய்யுமாறு உத்தரவிட்டு பல மாதங்களின் பின்னர் சி.ஐ.டி.யின் இயக்குநராக அவரை நியமிப்பதற்கு ஆணைக்குழுவை இயங்கச் செய்தார்.

பதில் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மார்ச் மாதம் 20 ஆம் திகதி ஓய்வுபெற்ற பின்னர் விக்ரமரட்ன பதில் பொலிஸ்மா அதிபர் என்ற பதவியில் சட்டவிரோதமாக நீதிக்கின்றார் என்பது ஆணைக்குழுவிற்கு தெரியாமலிருக்கலாம்.

அரசமைப் பின்படி அரசமைப்பு பேரவையின் அனுமதியின்றி 14 நாட்களிற்கு மேல் எவரும் பதில் பொலிஸ்மா அதிபராக நீடிக்க முடியாது.

சி.ஐ.டி.யின் இயக்குநரின் பதவியிலிருந்து அல்விஸை நீக்கி அவரை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கான நடவடிக்கையினை எடுக்குமாறு நான் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவை கேட்டுக் கொள்கின்றேன்.

அல்விஸ் கைதிலிருந்து தப்புவதற்கும் சி.ஐ.டி.யின் தலைவராக நியமிக்கப்படுவதற்கும் பதில் பொலிஸ்மா அதிபர் எந்த வகையில் உதவினார் என்பது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்" என அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார். (ஜ-4)

கஞ்சிபானை இம்ரானின் தந்தை மீது தாக்குதல்

(கொழும்பு)

மாளிகாவத்தை பகுதியில் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரர் கஞ்சிபானை இம்ரானின் தந்தை மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாளிகாவத்தை ஜும்மா பள்ளிவாசல் சந்தியில் நேற்று முன்தினம் மாலை அடையாளம் தெரியாத மூவர் கூரிய ஆயுதங்களால் குறித்த நபரை தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த கஞ்சிபானை இம்ரானின் தந்தை

சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலை மேற்கொண்ட சந்தேக நபர்களில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டமை தொடர்பாக கைது செய்யப்பட்ட கஞ்சிபானை இம்ரான், நீதிமன்றின் உத்தரவிற்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

மின் கட்டணங்களை பல தவணைகளாக செலுத்த வாய்ப்பு

(கொழும்பு)

மின் பாவனையாளர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மின் கட்டணங்களை பல தவணைகளாக செலுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு, எந்தவொரு காரணங்களுக்காகவும் மின்சாரம் துண்டிக்கப்படமாட்டாது என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இறுதியாக வழங்கப்பட்ட மின் கட்டண பட்டியல் சரியானது என்றும் நுகர்வோர் பயன்படுத்தும் அலகுகளின் எண்ணிக்கைக்கு மட்டுமே இது வழங்கப்பட்டுள்ளது என்றும் இலங்கை மின்சார சபைத்தலைவர் விஜித் ஹேரத் தெரிவித்தார். (ஜ-4)

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சலுகை

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சூரிய சக்தியிலான மின் உற்பத்திக் கருவிகளை இலவசமாக பெற்றுக் கொடுக்க மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். நாட்டில் குறைந்த வருமானம் பெறும் மின்சார வசதியில்லாத 12 ஆயிரத்து 500 குடும்பங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

மத்ரஸா கல்வி நடவடிக்கை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

(கொழும்பு)

சந்தேகத்தின் பேரில் கைது கைது செய்யப்பட்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவினால் கொண்டு நடத்தப்பட்டதாக கருதப்படும் முந்தலம் மத்ரஸா பாடசாலையில் பயின்ற மாணவர்களுக்கு வன்முறை நடவடிக்கைகள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதா? என்பது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

குறித்த மத்ரஸாவில் இதற்காக வன்முறை திட்டங்கள் அடங்கிய 3 புத்தகங்கள் தொடர்பில் கற்பிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இரகசிய பொலிஸ் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைக்கு நேற்று கொழும்பு நீதவான் ரங்க திஸாநாயக்க அனுமதி வழங்கினார்.

கொழும்பு கிங்ஸ்பெரி உணவகத்தில் தற்கொலை குண்டு தாக்குதல் நடத்திய சந்தேக நபரான இன்சாப் அஹமட் என்பவருக்கு உதவி வழங்கிய குற்றச்சாட்டில் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளும் விவசாயிகள், மீனவர்களுக்கு அறிவித்தல்

(கொழும்பு)

இம்மாதம் ஓய்வூதியம் பெறவுள்ள அனைத்து விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கான ஓய்வூதியத்தினை நாளை 20 ஆம் திகதி அனைத்து அஞ்சல் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சு நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது.

நாளை 20 ஆம் திகதி சனிக்கிழமை அனைத்து அஞ்சல் நிலையங்களுக்கும் விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கான ஓய்வூதியம் நிச்சயம் அனுப்பி வைக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

முஸ்லிம் சமுதாயம் கல்வியில் மேலோங்க பெரும் பங்காற்றியவர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் தீர்க்கதரிசனமும் செயற்றிறனும் மிக்க சுயலாபம் கருதாத முஸ்லிம் தலைவர்களில் ஒருவர் கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் ஆவார். எஸ்.எல்.எம். நெய்னா முஹம்மத் -பாத்துமா நாச்சியார் தம்பதியரின் புதல்வராக பதியுதீன் மஹ்மூத் வெலிகமயில் 1904 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதி பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை மாத்தறையில் உள்ள புனித ஜோசப் கல்லூரியிலும் அடுத்து கொழும்பு வெஸ்லி கல்லூரி, மருதானை ஸாஹிராக் கல்லூரி என்பவற்றிலும் பயின்று உயர் கல்வியை இந்திய அலிகார் சர்வகலாசாலையில் பயின்று முதுமாணிப் பட்டத்தையும் பெற்று பன்மொழிகளிலும் அவர் பாண்டித்தியம் பெற்றார்.

பதியுதீன் மஹ்மூத் அலிகார் சர்வகலாசாலையில் கல்வி கற்ற காலத்தில் இந்தியாவின் இரு பெரும் சுதந்திர இயக்க தலைவர்களான ஜவஹர்லால் நேரு, முஹம்மத் அலி ஜின்னா ஆகியோர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அத்தோடு பதியுதீன் மஹ்மூதீன் செயற்றிறனும் பேச்சுவன்மையும் அவரை தமது சக மாணவர்களிடையே புகழும் மதிப்பும் உடையவராக ஆக்கியது.

எனவே, லக்னோ நகரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அகில இந்திய மாணவர் சம்மேளனத்தின் தலைவராக அவர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

அதன் ஆரம்ப கூட்டத்தின் போது மேடையில் பதியுதீன் மஹ்மூத் தலைமை வகிக்க அவரது இரு புறங்களிலும் இரு பெரும் தேசிய தலைவர்களான ஜவஹர்லால் நேருவும் முஹம்மது அலி ஜின்னாவும் அமர்ந்திருந்தனர். அக்காலத்தில் பதியுதீன் மஹ்மூத் ஆப்கானிஸ்தான் மன்னரின் விருந்தினராக அந்நாட்டிற்கு விஜயம் செய்தார்.

அத்தோடு மலேசியா, பர்மா (மியன்மார்) ஆகிய நாடுகளிலும் சொற்பொழிவாற்றுவதற்காக அழைக்கப்பட்டார். அவரது பேச்சினால் ஆத்திரமுற்ற அக்கால பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அவரை மலேசியாவில் இருந்தும் பர்மாவில் இருந்தும் உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிட்டனர்.

இலங்கை திரும்பியதும் அவர் கம்பளை ஸாஹிரா கல்லூரியின் அதிபராக பதவியேற்றார். நான்கு வகுப்பறைகளைக் கொண்ட ஒரு கொட்டிலாக ஆரம்பிக்கப்பட்டிருந்த அப்பாடசாலை ஓர் உன்னத கலைக்கூடமாக மாற்றியமைத்த பெருமை பதியுதீன் மஹ்மூத்தையே சாரும். தனது இறுதி மூச்சு வரை கம்பளை ஸாஹிரா கல்லூரியின் மீது அளவிலா பற்றும் கரிசனையும் உடையவராகவே அவர் விளங்கினார்.

கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் கல்வி கற்கும் காலத்திலேயே எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவுடன் தொடர்பு ஏற்பட்டது. அத்தொடர்பானது பிற்காலத்தில் மிக நெருங்கிய நட்பாக மாறியது. பண்டாரநாயக்கவின் அரசியல் வாழ்க்கையில் மிக் விசுவாசத்திற்குரிய தோழராகவும் ஆலோசகராகவும் பிரச்சினை தீர்ப்பவராகவும் ஆற்றல் மிக்க பிரசாரகராகவும் பதியுதீன் மஹ்மூத் விளங்கினார்.

1956 இல்பண்டாரநாயக்க ஏனைய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து தேர்தலில் அமோக வெற்றி பெறுவதற்கு பின்னணியில் நின்று உழைத்தவர்களுள் பதியுதீன் மஹ்மூத் மிகவும் பிரதானமானவர். எனவே தான் பண்டாரநாயக்க தனது அமைச்சரவையை தெரிவு செய்தபோது பதியுதீன் மஹ்மூத்தை மாத்திரமே தன் அருகில் ஆலோசகராக அமர்த்திக் கொண்டார்.

அச்சந்தர்ப்பத்தில் உருவான அரசாங்கத்தில் கல்வி அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு பண்டாரநாயக்க பல முறை வற்புறுத்தியும் கூட பதியுதீன் மஹ்மூத் எவ்வித பதவிகளையும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். பின்னர் ஐ.நா. சபைக்கான இலங்கை தூதுக் குழுவின் உறுப்பினராக பணியாற்ற ஒப்புக்கொண்டார்.

1959 இல் பண்டாரநாயக்க கொலை செய்யப்பட்டதன் பின்னர் இலங்கை திரும்பிய பதியுதீன் மஹ்மூத், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் அரசியல் பிரவேசத்திற்கு மிக முக்கிய காரணகர்த்தாகவும் உறுதுணையாகவும் இருந்தார். 1960 இல் ஸ்ரீமாவோ அம்மையார் அமைத்த அரசாங்கத்தில் கல்வி, ஒலிபரப்புத்துறை அமைச்சராக பதியுதீன் மஹ்மூத் நியமிக்கப்பட்டார். அத்துடன் சுகாதார, வீடமைப்பு அமைச்சராகவும் சிறிது காலம் பணியாற்றினார்.

இக்கால கட்டத்தில் இலங்கையின் தேசிய வீரரும் சிறந்த கல்விமானும் கொழும்பு ஸாஹிரா கல்லூரி அதிபருமாகிய அல்ஹாஜ் ரி.பி.ஜயாவின் தலைமையிலான குழு 1938 இலும் 1942 இலும் விஜயம் செய்தது. யாழ்.முஸ்லிம் மாணவர்கள் கல்வியில் தலை சிறந்து விளங்க வேண்டுமென்பதே குறிக்கோளாக இருந்தது. அதனால் யாழ்ப்பாணத்திலும் கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் கிளை ஒன்று நிறுவப்பட வேண்டும் என்பதில் அக்கறை செலுத்தினார்.

எதிர்காலத்தில் முஸ்லிம் சமுதாயம் கல்வியில் மேலோங்கி காணப்பட வேண்டும் என்றும் அதற்கான அடித்தளத்தை காலதாமதமின்றி ஆரம்பிக்குமாறு எடுத்துக் கூறிவிட்டுச் சென்றார்.

இறுதிக் காலத்தில் நோயினால் அவதிப்பட்ட போதிலும் பதியுதீன் மஹ்மூத் 1997 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

அல்ஹாஜ் எம்.எஸ்.எம்
இக்பால் (ஜே.பி)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2053

Search for people, places and things

நிலக்வன்

உங்கள் பெற்றோர் பூமியில் இருக்கும் வரை
முழு உலகமும் உங்களுடையது

வரதன்

எறும்புகள் எறும்பூரும் பாதையில் தடை
ஏற்பட்டால் புதுப்பாதையில் தன் தடம் பதிக்கும்!
அந்நிலை உணரும் மனம் வேண்டும் நமக்கு...!
புதுத்தடம்

அகில்

பூனையை விட சிங்கம் வலிமையானது என்று
ஒருபோதும் எலிகள் ஒப்புக்கொள்வதில்லை!

விபுஸ்

நிலத்தில் விளைந்ததை விற்று காசாக்கியது
அந்தக் காலம்... நிலத்தையே விற்று
காசாக்குவது இந்தக் காலம்.

வதனி



ஆகாயத்தின் சேவைக்காக ஆண்டவன்
போர்த்திய அழகுப் பொன்னாடை வானவில்

தர்சி

கொரோனா தோடு

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

நாட்டில் ஜனநாயகத்தை வென்றெடுக்க தேசிய ரீதியில் ஒன்றிணைய வேண்டும்

அநுர வேண்டுகோள்

(கொழும்பு)

ஜனநாயகத்திற்கான போராட்டத்தின் போது முன்னிலை சோசலிசக் கட்சியுடன் இணைந்து செயற்படத் தயார் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஜனநாயகத்தை வென்றெடுப்பதற்கான போராட்டமும் காலனித்துவத்திற்கு எதிரான போராட்டமும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டமும் உள்ளது. ஆகவே, நாட்டில் வென்றெடுக்க வேண்டியுள்ள விடயங்களுக்காக தேசிய ரீதியில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

10 பில்லியன் ரூபா செலவிற்குள் தேர்தல் நடத்தத் தீர்மானம்

(கொழும்பு)

2020 பொதுத் தேர்தலை 10 பில்லியன் ரூபா செலவுக்குள் நடத்தி முடிக்க முயற்சிப்பதாகத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக ஏற்கனவே திட்டமிட்டதை காட்டிலும் அதிக தொகை செலவு ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே தேர்தலை நடத்தி முடிக்க 7 தொடக்கம் 7.5 பில்லியன் ரூபாவே தேவை என மதிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் கொரோனாத் தடுப்பு சுகாதார வசதிகளை செய்து கொடுக்க வேண்டியுள்ளமையால் செலவு மேலிட்டுள்ளது.

இந்த நிலையில் முடியுமானளவு 10 பில்லியன் ரூபாவுக்குள் நடத்தி முடிக்க முயற்சி செய்யப்படும்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் 90 நிரந்தரப் பணியாளர்களும் 60 தற்காலிகப் பணியாளர்களும் சேவை புரிகின்றனர். அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் சுகாதார நடைமுறைகளுக்கு செலவுகள் செய்யப்படுவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

சுற்றுலாப்பயணிகளுக்கு 3 தடவை பி.சி.ஆர்.சோதனை

பிரசன்ன தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் அனைத்து சுற்றுலாப் பயணிகளும் மூன்று தடவைகள் பி.சி.ஆர்.சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என சுற்றுலா மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று மேலும் பரவாமல் இருப்பதை தடுக்கும் நோக்கத்துடன் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன்படி சுற்றுலாப் பயணிகள் தமது நாட்டிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்தின் எதிர்மறையை உறுதிப்படுத்தும் பி.சி.ஆர்.சோதனை முடிவை வைத்திருக்க வேண்டும் என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து விமான நிலையங்களில் பயணிகள் தரையிறங்கிய பின்னர் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் சோதனை முடிவுகள் அறியப்படும் வரை அனைத்துப் பயணிகளும் விமான நிலையங்களுக்கு அருகிலுள்ள ஹோட்டலில் தங்க வைக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து, இலங்கையில் தங்கியிருக்கும்போது அனைத்து சுற்றுலாப்பயணிகளும் மேலும் இரண்டு தடவைகள் பி.சி.ஆர்.சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் மேலும் அவ்வாறு நாட்டுக்குவரும் சுற்றுலாப் பயணிகள் சுகாதார அதிகாரிகளினால் தொடர்ந்தும் கண்காணிக்கப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இதுவரை 237 பேர் கைது

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய விசாரணைகளை விரைவில் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

குறித்த விசாரணைகளுக்கு அமைய மேலும் சில சந்தேகநபர்கள் கைது செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் 237 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஜ-4)

செய்திச்சுருக்கம்

ஜனாதிபதியின் கையெழுத்தை பயன்படுத்தி மோசடி செய்த நபருக்கு மறியல் நீடிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையெழுத்து மற்றும் கடித தலைப்பு என்பவற்றை மோசடியாகப் பயன்படுத்திய நபரை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி வரை மீள விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பணி நீக்கம் செய்யப்பட்டிருந்த இந்நபர், கொடுப்பனவு மற்றும் பதவி உயர்வுடன் மீள சேவையில் இணைத்துக் கொள்ளும்படி குறிப்பிட்டு ஜனாதிபதியின் கடித தலைப்பில் அவரது கையொப்பத்துடனான கடிதமொன்றை கடந்த மாதம் 28 ஆம் திகதி இலங்கை வங்கியின் தலைவருக்கு அனுப்பியிருந்தார்.

அது போலியானது என உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் குமார என்ற குறித்த நபரை வங்கியின் தலைமையகத்திற்கு அழைத்த பின்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கைது செய்தனர். கடிதத்தைத் தயாரிக்கப் பயன்படுத்திய மடிக்கணனி மற்றும் ஏனைய உபகரணங்கள் ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

மதுபோதையில் சாரத்தியம் கைது செய்யும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

மது போதையில் வாகனம் செலுத்துபவர்களைக் கைது செய்யும் நாடு தழுவிய சுற்றிவளைப்புக்கள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கடந்த வருடம் ஜூலை மாதம் தொடக்கம் கடந்த 15 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 45 ஆயிரத்து 758 பேருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. வழக்குத் தொடரப்பட்டுள்ளவர்களிடம் தண்டப்பணம் அறவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி ரூபா	மருதனார்மடம் ரூபா	சாவகச்சேரி ரூபா	கிளிநொச்சி ரூபா
கத்தரிக்காய்	80	100	60	100
உருளைக்கிழங்கு	140	120	120	140
பச்சைமிளகாய்	100	120	140	120
தக்காளி	180	220	180	200
மரவள்ளிக்கிழங்கு	120	120	120	100
கோவா	150	140	130	140
கரட்	140	180	180	200
பூசணி	50	40	135	40
புடோல்	60	60	60	100
வாழைக்காய்	50	80	40	80
சின்ன வெங்காயம்	250	200	300	250
பெரிய வெங்காயம்	100	80	80	80
பாகற்காய்	200	200	200	200
வெண்டிக்காய்	50	60	60	100
கருணைக் கிழங்கு	100	120	140	120
பயற்றங்காய்	100	80	40	60
லீக்ஸ்	140	150	160	200
பீற்றூட்	120	140	120	120
கறிமிளகாய்	80	80	200	160
முருங்கைக்காய்	350	700	300	400
போஞ்சி	200	150	200	100
கத்தரிதம்புள்ள	80	80	60	80
கீரை - 1 பிடி	40	25	40	30
தேசிக்காய்	400	400	400	350
தேங்காய் (ஒன்று)	60	45	60	40-60
இராசவள்ளி	250	250	250	250
வெங்காயப்பூ	300	240	300	--
முள்ளங்கி	80	80	80	120
பொன்னாங்காணி	40	25	40	40
வல்லாரை	15	50	20	20
ஈரப்பலா	60	80	60	100

தானத்தில் சிறந்தவர் கர்ணனே!

ரொம்ப நாட்களாகவே பாண்டவர்களுக்கு ஒரு சந்தேகம் இருந்தது.

அது நம்முடைய அண்ணன் தர்மரும் தானம் செய்வதில் சிறந்தவர்.

இருப்பினும் கர்ணனையே ஏன் எல்லாரும் தானம் செய்வதில் சிறந்தவன் என்று கூறுகின்றனர் என்பதுதான் அது. இவர்கள் மனதில் உள்ள சந்தேகத்தை அறிந்த கிருஷ்ணன் ஒருநாள் பாண்டவர்களை அழைத்தார்.

தங்கமலை, வெள்ளிமலை என இரு மலைகளை உருவாக்கினார். பின் பாண்டவர்களை நோக்கி, "இங்கே பாருங்கள்! இந்த இரு மலைகளையும் பொழுது சாய்வதற்குள் தர்மம் செய்துவிட்டால் தானத்தில் சிறந்தவர் தர்மர் என்று நீங்கள் சொல்வதை ஒப்புக் கொள்கிறேன்" என்று கூறினார்.

பீமனும், அர்ஜுனனும் மற்றவர்களும் அந்த இரு மலைகளில் இருந்து தங்கத்தையும் வெள்ளியையும் பாளம் பாளமாக வெட்டி எடுத்துத் தர தர்மர் அதை உடனுக்கு உடன் நகர மக்களுக்குத் தானம் செய்தார். ஆனால், நகர மக்களில் பெரும் பகுதியினருக்கு அவ்வாறு தானம் செய்தும் தங்கமும் வெள்ளியும் குறையவேஇல்லை.

அதற்கு மாறாக அவ் விரு மலைகளும் வெட்ட வெட்ட வளர்ந்து கொண்டே இருந்தன.

மாலைப் பொழுது வந்தது.இனி தங்களால் முடியாது என்பதை உணர்ந்த தர்மர், "எங்களால்முடியாது கண்ணா!" என்று தன் தோல்வியை ஒப்புக் கொண்டார்.

உடனே கிருஷ்ணன் ஓர் ஆளை அனுப்பி கர்ணனை வரவழைத்தார்.

"கர்ணா! இதோ பார் இந்த இரண்டு மலைகளிலே ஒரு மலை தங்க மலை. மற்றொன்று வெள்ளி மலை. இதை நீ பொழுது சாய்வதற்குள் தானம் செய்ய வேண்டும். பொழுது சாய இன்னும் ஒரு நாழிகைப் பொழுதே உள்ளது. உன்னால் முடியுமா? யோசித்துச் சொல்" என்று கூறினார்.

உடனே கர்ணன், "இதில் யோசிக்க என்ன இருக்கிறது இப்போதே செய்து காட்டுகிறேன்" என்று கூறி அங்கிருந்த இருவரை அழைத்து, "இதோ பாருங்கள்! நீங்கள் இருவரும் ஆளுக்கொரு மலையாக இவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி தனது தர்மத்தை முடித்து விட்டுக் கிளம்பினான்.

பாண்டவர்கள் அசந்து போயினர். அவர்களை ஒரு அர்த்தப் பார்வையுடன் பார்த்து சிரித்தார் கிருஷ்ணன். தர்மருக்கும் பரந்த மனசு தான். அதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால், அவரைக் காட்டிலும் தான தர்மம் செய்வதில் பரந்த மனசு உடையவன் கர்ணனே என்பதை சொல்லாமல் பாண்டவர்களுக்கு உணர்த்திவிட்டார் கிருஷ்ணன்.

மழலைப் பாடல்

கோழி கிளறினால் வேலி போடலாம்
வாடா கண்ணா வா!
வேலியை ஆடு தாண்டிவிடுமே
போடா வரமாட்டேன்!

கீரை விதைப்போம் கீரை விதைப்போம்
வாடா கண்ணா வா!
கீரை வளரத் தண்ணீர் வேண்டுமே
போடா வரமாட்டேன்!

கேணி நீரை இறைத்துக் கொள்ளலாம்
வாடா கண்ணா வா!
கீரை வளர்ந்தபின் என்ன செய்வது?
போடா வரமாட்டேன்!

கீழைத் தெருவில் விற்றுவிடலாம்
வாடா கண்ணா வா!
விற்ற பணத்தை என்ன செய்வது?
போடா வரமாட்டேன்!

வீணாக்காமல் வங்கியில் சேர்ப்போம்
வாடா கண்ணா வா!
வீடும் நாடும் வாழ்த்த வாழ்வோம்
வா வா அண்ணா!

எண்கோலத்தைப் பூர்த்தி செய்க



மூளைக்கு வேலை

புதிர் 01இற்கான விடை

01) 300 முட்டைகள்

உங்களுக்குத் தெரியுமா?

- சூரியன் ஒரு மிகப்பெரிய வாயுக்கோள்.
- இது ஒரு சிறிய விண்மீன் (Star).
- அதாவது குள்ள விண்மீன் (Dwarf Star).



- இது தொடர்ந்து சூடான வாயுக்களை வெளியிடும் ஒரு மிகப்பெரிய நெருப்புப் பந்து.
- இது பெரும்பாலும் நைதரசன் (73%) மற்றும் ஹீலியம் (25%) வாயுக்களை உள்ளடக்கியது.
- சிறிதளவு விகிதத்தில் ஒட்சிசன், கார்பன், நியான் மற்றும் இரும்பு ஆகியவற்றை உள்ளடக்கியது.
- சூரிய ஒளி பூமியை வந்தடைய 8.20 விநாடிகள் ஆகிறது.
- இது பூமிக்கு மிக அருகில் உள்ள விண்மீன் (Star).

தொடர்புபடுத்துக

01) பென்சில்

02) விமானம்

03) யானை

04) மாம்பழம்

05) முயல்

நற்செயல் என்ற விளை நிலத்தைச் சீர்படுத்து. அதில் இறைவன் திருநாமம் என்ற விதையைத் தூவு. ~குருநானக்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

புகையிலைச் செய்கைக்கு மாற்றாக கற்றாழைச் செய்கையா?

தவறான கருத்துக்களும் பிழையான புள்ளி விபரங்களும் மக்கள் மத்தியில் குழப்பங் களையும் நம்பிக்கையீனங்களையும் பாதிப்புக் களையுமே ஏற்படுத்தும்.

எனவே எதிலும் சரியான தரவுகள் தகவல் கள் முன்வைக்கப்பட வேண்டும்.

தீவகத்தில் நீண்டகாலமாக நடைபெற்ற புகையிலைச் செய்கைக்கு இப்போது தடை வந்துள்ளது.

புகையிலைப் பயன்பாடு ஏற்படுத்தக்கூடிய பக்கவிளைவுகள் பாரதூரமானவையாக இருப் பதால் புகையிலைச் செய்கைக்குத் தடை என்று கூறப்படுகிறது.

எனினும் சிகரட் விற்பனை இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

ஆக, நம் தமிழர்களின் விவசாயப் பொருளா தாரத்தில் பணப்பயிராக இருக்கக்கூடிய புகை யிலையை இல்லாமல் செய்கின்ற நோக்கில், புகையிலைச் செய்கைக்குத் தடை விதிக்கப்பட் டது என்று கூட நாம் கூறிக் கொள்ளலாம்.

எதுவாயினும் புகையிலைச் செய்கைக்குத் தடை விதிக்கப்பட்டதோடு தீவகத்தின் விவ சாயச் செய்கை முடிவுக்கு வருகிறது என்பது தான் உண்மை.

எனினும் புகையிலைச் செய்கையில் ஈடு பட்ட தீவக மக்கள் புகையிலைச் செய்கையில் இருந்து விலக்கப்படுவதால், அவர்களின் பொரு ளாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

தீவகத்தைப் பொறுத்தவரை அங்கு புகை யிலை, மிளகாய் ஆகிய பயிர் வகைகளே செய்கைக்கு உகந்தவை.

அதேநேரம் தீவகத்தில் ஒரு பகுதி மக்கள் மீளக் குடியேறினர் என்றால், அதற்குக் காரு ணம் அம்மக்களுக்கு வழங்கப்பட்ட வசதிகள் அல்ல.

மாறாக விவசாயமும் கடற்றொழிலுமே தீவகத்தின் மீள்குடியமர்வுக்கு வித்திட்டன.

ஆனால் இப்போது புகையிலைச் செய்கைக்கு தடை வந்த பின்னர் தீவகத்து விவசாயிகள் அங்கிருந்து வெளியேறுகின்ற அல்லது வேறு வேலையில் ஈடுபடுகின்றதான அவலத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இந்நிலையில் தீவகத்தில் புகையிலைச் செய்கைக்குப் பதிலீடாக கற்றாழைச் செய்கை அமைந்துள்ளதென்ற தகவல்கள் முழுக்க முழுக்கத் தவறானவை.

உண்மையில் தீவகத்தில் கற்றாழைச் செய்கை படுதோல்வி கண்டுள்ளது என்பதே உண்மை.

இதனை நிரூபிக்க வேண்டுமென யாரே னும் வாதிட்டால் அதனை ஆதாரபூர்வமாக நிரூபிப்பதற்கு நாம் தயாராக உள்ளோம்.

ஒரு சில இடங்களில் ஒரு சிலர் செய்கின்ற கற்றாழைச் செய்கையை புகையிலைச் செய்கைக்கு ஈடானதென முடிவு செய்தால், மாற்றுச் சிந்தனைக்கான கதவு பூட்டப்படும்.

எனவே தீவகத்தில் புகையிலைச் செய் கைக்கு ஈடாகக் கற்றாழைச் செய்கை இல்லை என்பதும் தீவகத்தில் கற்றாழைச் செய்கை யில் ஈடுபட்ட பலர் கந்தறுந்து போயுள்ளனர் என்பதுமான தகவல்கள் இங்கு கவனிக் கப்பட வேண்டும்.

சுகாதார பாதுகாப்பிற்கு முன்னுரிமையளித்து தேர்தல் நடத்தப்படும்

ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

சுகாதாரப் பாதுகாப் பிற்கு முன்னுரிமை வழ ங்கி தேர்தல் நடவடிக் கைகளை வெற்றிகர மாக மேற்கொள்வதற்கு அரசாங்கத்தின் முழு மையான ஒத்துழைப்பு தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு கிடைக்கு மென ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ உறுதி யளித்தார்.

ஜனாதிபதி அலுவல கத்தில் நேற்று முன்தி னம் புதன்கிழமை தேர் தல்கள் ஆணைக்குழு வின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஜனாதி பதியைச் சந்தித்து கலந்து ரையாடினர். இதன்போதே ஜனாதிபதி கோட்டாபய இதனை தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக் கையில்,

"கொரோனா நோய்த் தொற்றை ஒழிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்ட வகையில் சில மாதங் கள் மிகவும் அர்ப்பணிப் புடன் செயற்பட்டது. அது தேர்தலை எதிர்பார்த்த ன்றி மக்களையும் நாட் டையும் இந்த ஆட்கொ ல்லி நோய்த் தொற்றிலி ருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கையாகும்.

சில மாதங்களாக பின் பற்றிய சுகாதார நடை முறைகளை தொடர்ந்தும முன்கொண்டு செல்ல முடியும்.

இந்த நிலைமை குறித்து மக்கள் தெளி வுடன் இருப்பதன் மூலம் எவ்வித சுகாதாரப் பிரச் சினையுமின்றி தேர்தலு க்கு முகம்கொடுக்க முடி யும்" என ஜனாதிபதி தெரி வித்தார்.

இதேவேளை, தேர் தலுக்கான அடிப்படை திட்டங்கள் வகுக்கப்பட் டுள்ளன.

அதிகாரிகள், பாதுகாப் புத்துறை உள்ளிட்ட ஏனைய அனைத்து தரப் பினரதும் பங்களிப்பை பெற்றுக்கொள்வதாகவும் தேர்தல்ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப் பிரிய தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

மதமும் அரசியலும்

மதத்தின் பங்கு ஒருவரை நேர்மையும் அன்பும் உள்ளவராகச் செய்வதாகும். அரசியல் என்றால் மக்கள் அவர்களது நலம் இவற்றில் கவனம் கொள்வது ஆகும். மதமும் அரசியலும் சேர்ந்து இல்லாத போது நேர் மையற்ற அரசியல்வாதிகளையும் போலித்தனமான மதத்தலைவர்களையும் நீங்கள் பெறுகிறீர்கள்.

நேர்மையும் அன்பும் உள்ள மத நம்பிக்கையுடைய ஒருவன் சகல மக்களுடைய நலத்திற்கும் கண்டிப்பாகக் கவனம் செலுத்துவான். அதனால் அவன் ஒரு உண் மையான அரசியல்வாதியாகிறான். ஒரு உண்மை யான அரசியல்வாதி நேர்மையும் அன்பும் உள்ளவராகத தான இருக்க முடியும். அவர் மத நம்பிக்கையுடைய வராக மட்டு மன்றி வேறெதுவுமாக இருக்க முடியாது. எல்லா அவ தார புருஷர்களும் தீர்க்கதரிசிகளும் மக்களை அக்க றையுடன் கவனித்துக் கொண்டே வந்திருக்கின்றனர். அதனால அரசியலில் இருந்தனர். இதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுக்களை நீங்கள் பார்க்கலாம். (தொடரும்)

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 20 ஆம்திகதிசனிக்கிழமை காலை 8.30 மணி யிலிரு ந்து மாலை 5 மணி வரை

யாழ். பிரதேசத்தில் டொக்யாட் முல்லை, மரு தனார்மடம் சந்தை, மரு தனார்மடம் பிரதேசம், மருதனார்மடம் சந்தியி லிருந்து கொக்குவில் செம் பியன் லேன் வரை, இணு வில், மருதனார்மடம் சந்தி யிலிருந்து இணுவில் புகை யிரத நிலையம் வரை, பாலாவோடை, இணுவில் கந்தசாமி கோவில், துரை வீதி, உப்புமடம் சந்தி, உப்புமடம் சந்தியிலிருந்து கோண்டாவில் புகையிரத நிலையம் வரை, முத் தட்டுமடம் வீதி, தாவடி, பத் தனை, சுதுமலை, மாப்பி யன், விஜிதா மில் பிரதே சம் தாவடி, ஆஸ்பத்திரி வீதியில் கஸ்தூரியார் வீதி சந்தியிலிருந்து காரைநகர் வீதி சந்தி வரை, கே.கே. எஸ். வீதி சத்திர சந்தியிலி ருந்து துரையப்பா விளை யாட்டரங்கு வரை, யாழ்ப் பாணம்1ஆம், 2ஆம், 3ஆம, 4ஆம் குறுகு தெருகள், பலாலி வீதி வேம்படி சந்தி யிலிருந்து முலவை சந்தி வரை, புகையிரத நிலைய வீதி, மார்டின் வீதி, வட மாகாண ஊழியர் திணை க்களம், தேசிய நீர்வழங் கல் வடிகால் சபை சிவன் பண்ணை வீதி, ஸ்ரீலங்கா ரெலிகொம், யாழ்.பொது நூலகம், யாழ் பொலிஸ் நிலையம், யாழ் நீதிமன் றக் கட்டடத் தொகுதி, STS வைத்தியசாலை 1ஆம் குறுக்குத் தெரு, யாழ்.கலா சார நிலையம், கிறீன் கிறாஸ் விடுதி, யாழ். புகை யிரத நிலையம், DAN தொலை க்காட்சி நிலையம், ஹோட் டல் North GATE ஆகிய இடங்களிலும்

வவுனியா பிரதேசத் தில் சாளம்பைக்குளம் ஒரு பகுதி, கிறிஸ்தவகு ளம் ஆகிய இடங்களிலும்,

மன்னார் பிரதேசத் தில் மாலுவாடி, New Silk Road Aquatic Company PVT (Ltd) ஆகிய பிரதே சங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நற்செயல் என்ற விளை நிலத்தைச் சீர்படுத்து. அதில் இறைவன் திருநாமம் என்ற விதையைத் தூவு. -குருநானக்

இந்து சமய தத்துவங்கள் ஜநூறு

இறைவன் எல்லாம் அறிந்தவன். ஆதலினால் நமக்கு என்ன வேண்டும், எப்பொழுது வேண்டும் என்பது இறைவனுக்குத் தெரியும். "இறைவனே, எனக்கு அதைக்கொடு, இதைக்கொடு" என்று கேட்பது தாழ்ந்த படியாகும்.

"வேண்டத்தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ"
என்ற திருவாசகத்தால் அறிக.

அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

ஆதிபராசக்தியின் பத்து தோற்றங்களும் பெயர்களும்

கமலாத்மிகா: தாமரையில் உறைபவள் என பொருள். அனைத்து சக்தியின் கிரியா சக்தியாக திகழ்பவள். அழகும் , செல்வமும் நிறைந்தவள். இவ ளின் வடிவத்தையே லஷ்மியாக வணங்குகிறோம். வெள்ளை யானை சூழ வலம் வரும் நாயகி கமலாத் மிகா.

காளி: கரிய நீல நிறம் கொண்டவள். வேதத்தில் அதர்வன வேதத்தை குறிப்பவள். மயானத்தில் உறை பவள். வெட்டுண்ட உடல்களை ஆடையாக அணிப வள். அடிமேல் அடி எடுத்து மிக மெதுவாகவும், ஆக் ரோஷமாகவும் நகர்பவள். சிவனை பாதத்திற்கு அடியில் வைத்திருக்கும் குரூரமான அமைப்பு காளியின் உருவம்.

சின்னமஸ்தா: தலையற்ற உடலுடையவள். தலை கழுத்து பகுதியில் இருந்துவரும் இரத்தத்தை தனது கைகளில் உள்ள பாத்திரத்தில் பிடிக்கும் உருவம் இவளுடையது. ஆண் - பெண் உடலின் மேல் நர்த்த னம் ஆடும் நிலையில் காட்சி அளிப்பவள்.

தூமாவதி: கைகளில் முறத்துடன் விதவை கோலத்தில் அமர்ந்திருப்பவள். வெள்ளை நிற ஆடையும், நகைகள் இல்லாத விரிந்ததலையும் கொண்டவள். கையில் புகைகக்கும் பாத்திரம் உடைய வள். கொடுமையான மற்றும் தொற்றும் நோய்களுக்கு காரணமானவள்.

திரிபுர பைரவி: பைரவி என எல்லோராலும் அழைக்கப்படுபவள். கழுதையின் மேல் அமர்ந்து குரூரமாக காட்சியளிப்பவள். கருநீல நிறத்தில் உடலும், பெரிய போர்வாள் கைகளிலும் கொண்டவள். முகத்தில் அழகும் உடலில் ஆவேசமும் கொண்ட வித்யாசமான உருவ அமைப்பு கொண்டவள்.

தேயிலை ஊக்குவிப்பு மற்றும் விற்பனை வரி 6 மாதத்திற்கு தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

தேயிலை ஏற்றுமதி மீது விதிக்கப்பட்டுள்ள தேயிலை ஊக்குவிப்பு மற்றும் விற்பனை வரியை 6 மாத காலம் தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கொவிட்-19 தொற்று நிலைமை காரணமாக தேயிலை தொழில்துறை பாரிய சவால்களுக்கு முகம்கொடுத்துள்ளது.

இதில், தேயிலைத் தொழிற்சாலை செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லல், தேயிலை இறக்குமதி செய்யும் அநேகமான நாடுகளில் வாங்கும் திறன் ஒப்பீட்டளவில் குறைவடைதல், விநியோக நிர்வாகத்தில் சிக்கல்கள் மற்றும் தயாரிப்பு தரத்தின் நிலைத்தன்மையை பராமரித்தல் ஆகியன பிரதான சவால்களாகும்.

இந்தச் சவால்களுக்கு மத்தியில் தேயிலை தொழில்துறையின் ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்துவதற்காக நிதி சலுகையாக, ஏற்றுமதி செய்யப்படும் ஒவ்வொரு கிலோகிராம் தேயிலை மீதும் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களிடம் தற்போது அறவிடப்படும் 3.50 ரூபாய் தேயிலை ஊக்குவிப்பு மற்றும் விற்பனை வரி 6 மாத காலம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ஜ-4)

நடிகர் சுஷாந்த் சிங் மரணம் சல்மான்கான் உட்பட 8பேர் மீது வழக்கு

(டில்லி)

சுஷாந்த் சிங் மரணத்தின் பின்னணியில் சல்மான் கான் உள்ளிட்ட 8 பேர் இருப்பதாக சட்டத்தரணி ஒருவர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

டோனி வாழ்க்கை வரலாற்று திரைப்படத்தில் நடித்து பிரபலமான நடிகர் சுஷாந்த் சிங் கடந்த ஞாயிற்றுக்கிழமை வீட்டில் சடலமாக மீட்கப்பட்டார். அவர் தற்கொலை செய்து கொண்டதாக கூறப்பட்டது. அவரது மரணம் பொலிவூட் திரையுலகில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியது.

அதேசமயம் சுஷாந்த் சிங்கின் மரணத்தில் மர்மம் இருப்பதாக உறவினர்கள் தெரிவித்திருக்கும் நிலையில், தூக்குக்

கயிறு கழுத்தில் இறுக்கியதால் மூச்சுத் திணறி உயிரிழந்ததாக பிரேதப் பரிசோதனை அறிக்கை தெரிவித்திருந்தது.

இவரது மரணத்தைத் தொடர்ந்து திரைத்துறைக்குள் இருக்கும் வாரிசு அரசியல், அதிகார துஷ்பிரயோகம், பின்புலம் இல்லாமல் துறைக்குள் வருபவர்களை வாரிசுகள் நடத்தும் விதம் என பல்வேறு பிரச்சினைகள் குறித்து பல பிரபலங்கள் பேசி வருகின்றனர்.

இந்நிலையில் சட்டத்தரணி சுதீர் குமார் ஓஜா என்பவர் பீகார் மாநிலம் முஷாபர்பூர் நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தொடர்ந்துள்ளார்.

சல்மான் கான் உள்ளிட்டோர் கொடுத்த அழுத்தம் காரணமாக சுமார் 7 படங்களில் இருந்து சுஷாந்த் சிங் நீக்கப்பட்டதாகவும், அதனால் பட வாய்ப்பு இல்லாமல் மன உளைச்சலில் இருந்த அவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் சட்டத்தரணி குற்றம்சாட்டியுள்ளார்.

சல்மான் கான் உள்ளிட்ட 8 பேர் மீது சட்டப்பிரிவு 306, 109 உள்ளிட்ட 4 பிரிவுகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சட்டத்தரணி தெரிவித்துள்ளார். (ஜ-4)

இந்திய - சீன எல்லையில் மோதல்; சீனப்பொருட்களை புறக்கணியுங்கள்

மல்யுத்த வீரர் வேண்டுகோள்

(டில்லி)

சீனாவின் பொருட்களை வாங்காமல் மக்கள் அனைவரும் புறக்கணிக்க வேண்டும் என்று மல்யுத்த வீரர் சுஷில் குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

லடாக் பகுதியில் சீன இராணுவம் நடத்திய எதிர்பாராத தாக்குதலில் 20 இந்திய இராணுவ வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். 'நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த இராணுவ வீரர்களுக்கு தலை வணங்குவதாகவும், அவர்களது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதாகவும் இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் விராட் கோலி, துணை கப்டன் ரோகித் சர்மா ஆகியோர் டுவிட்டர் மூலம் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ஒலிம்பிக் போட்டியில் 2 பதக்கம் வென்ற வரான இந்திய மல்யுத்த வீரர் சுஷில் குமார் கருத்து தெரிவிக்கையில்,

'சீனாவுக்கு எதிரான மோதலில் நமது இராணுவ வீரர்கள் உயிர்த் தியாகம் செய்ததை கேள்விப்பட்டு மிகுந்த வேதனை அடைந்தேன்.

நாட்டுக்கான சேவையில் உயிர்நீத்த வீரர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தலை வணங்குகிறேன்.

கொரோனாவுக்கு எதிராக ஒட்டுமொத்த உலகமும் இணைந்து போராடும் வேளையில் சீனா இதுபோன்ற செயலில் ஈடுபட்டுள்ளது. சீனாவுடன் நாம் நல்ல உறவை வைக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை.

சீனாவின் பொருட்களை வாங்காமல் மக்கள் அனைவரும் புறக்கணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சீனப் பொருட்கள் நமது நாட்டுக்குள் நுழையாமல் தடுக்க அரசு கொள்கை ரீதியான முடிவு எடுக்க வேண்டும்' என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

கர்ப்பிணிப்பசுவை காப்பாற்றிய பொலிஸார்

(கொழும்பு)

இறைச்சிக்காக வெட்டப்படவிருந்த கர்ப்பிணிப் பசு ஒன்று ஹாலிஎல பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. (ஜ-4)

அபராதங்களுக்கு சலுகைக்காலம்

(கொழும்பு)

பெப்ரவரி 16 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னரான போக்குவரத்து அபராதங்களை செலுத்துவதற்காக அரசாங்கம் ஜூன் 30 ஆம் திகதி வரை சலுகைக் காலத்தை வழங்கியுள்ளது. (ஜ-4)

முன்னாள் ஜனாதிபதி, பிரதமர் வாக்குமூலம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளார். மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் இந்த வாக்கு மூலம் பதிவு செய்யப்படவுள்ளது.

இதேவேளை முன்னாள் பிரதமரின் ஆலோசகர் பாஸ்கரலிங்கம் மற்றும் மக்கள் வங்கியின் முன்னாள் பொது மேலாளரிடம் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஜ-4)

சுவரொட்டிகளை அகற்றும் பணியில் தொழிலாளர்களை இணைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலை முன்னிட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ள பதாகைகள் மற்றும் சுவரொட்டிகளை அகற்றுவதற்கு தொழிலாளர்களை இணைத்துக் கொள்ளவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேவைக்கேற்ப நாட்டில் பொலிஸ் நிலையங்கள் ஊடாக தொழிலாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். நாடளாவிய ரீதியில் கடந்த 14 ஆம் திகதி முதல் இன்றுவரை 12 ஆயிரத்து 84 பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் அகற்றப்பட்டுள்ளன. இந்த வாரத்திற்குள் மீதமுள்ள பதாகைகள் மற்றும் சுவரொட்டிகளும் அகற்றப்படும் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஜ-4)

உலகை உலுக்கும் கொரோனா; உலகக்கிண்ண கிரிக்கெட் சாத்தியமற்றது

(சிட்னி)

கொரோனா தொற்றுக்கு மத்தியில் இந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் 20 ஓவர் உலகக் கோப்பை போட்டியை நடத்துவது சாத்தியமற்றது என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியத் தலைவர் அறிவித்துள்ளார்.

16 அணிகள் பங்கேற்கும் 7ஆவது 20ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் 18ஆம் திகதி முதல் நவம்பர் 15ஆம் திகதி வரை அவுஸ்திரேலியாவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

உலகையே ஆட்டிப் படைத்து வரும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக இந்த போட்டி நடைபெறுவதில் தொடர்ந்து சந்தேகம் நிலவி வருகிறது.

20 ஓவர் உலகக் கோப்பை போட்டியை திட்டமிட்டபடி நடத்தலாமா? அல்லது தள்ளி வைக்கலாமா? என்பது குறித்து முடிவு செய்ய சர்வதேச கிரிக்கெட் சபைப் பிரதிநிதிகள் கூட்டம் டெலிகொன்பரன்ஸ் மூலம் இரண்டு முறை நடந்தும் எந்தவித முடிவும் எட்டப்படவில்லை.

கடைசியாக கடந்த வாரம் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் இன்னும் ஒரு மாதம் பொறுத்திருந்து அந்தச் சமயத்தில் நிலவும் சூழ்நிலைக்கு தகுந்தபடி முடிவு செய்யலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

20 ஓவர் உலகக் கோப்பை போட்டி தள்ளிப்போனால் அந்தக் காலகட்டத்தில் ஐ.பி.எல். போட்டியை நடத்தலாம் என்று இந்திய கிரிக்கெட் வாரியம் காய்நகர்த்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

வாகனத்தில்...

மணியளவில் கிளிநொச்சியில் இருந்து தம்புள்ளை நோகி கஞ்சா கடத்தப்படுவதாக வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக சோதனை நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸார் 20 கிலோ கேரளா கஞ்சாவினை கைப்பற்றியதுடன், அதனை கடத்திச் செல்வதற்கு பயன்படுத்தப்பட்ட கப் ரக வாகனத்தை மீட்டுள்ளனர்.

குறித்த கடத்தல் நடவடிக்கை பொலிஸாரை திசை திருப்பும் விதமாக சூட்சுமமான முறையில் வாகனத்தின் அடிச் சட்டத்தில் பெட்டி முறையில் அமைக்கப்பட்டு கடத்தப்பட்டிருந்ததுடன் கஞ்சா வைக்கப்பட்டிருந்த கப் ரக வாகனத்திற்கு பாதுகாப்பை வழங்கும் நோக்குடன் அதற்கு முன்பாக கார் ஒன்றினையும் கடத்தல் காரர்கள் செலுத்தி சென்றுள்ளதாக பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் பொலநறுவை பகுதியைச் சேர்ந்த 31 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்வுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-3,299)

யாழில் 10...

தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிக சூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கூட்டம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத்தினராகிய நாங்கள் பாதுகாப்பு விடயம் தொடர்பில் மிகவும் அக்கறையாகவும் தெளிவாகவும் செயற்பட்டு வருகின்றோம். அதிலும் குறிப்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மிகவும் அர்ப்பணிப்புடன் பாதுகாப்பு விடயம் தொடர்பில் செயற்பட்டு வருகின்றார்.

அவர் பதவியேற்ற குறுகிய காலத்திற்குள் மூன்று தடவைகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல கிழக்கு மாகாணம் மற்றும் ஏனைய மாகாணங்களிலும் இதுபோன்ற விசேட கூட்டங்கள் முப்படையினருடன் இடம் பெற்று வருகின்றது.

எனவே யாழில் இடம்பெற்ற கூட்டம் ஒரு முக்கியமான கூட்டமாக எனக்கு தென படவில்லை.

ஏனெனில் கடந்த டிசம்பர் மற்றும் ஏப்ரல் மாதங்களில் கூட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் முப்படையின் பிரதானிகளுடன் குறித்த கூட்டம் யாழ் மாவட்டத்தில் இடம்பெற்றது. எனவே விசேடமாக ஒன்றும் பேசப்படவில்லை.

அதிலும் குறிப்பாக காணி விடுவிப்பு பற்றி எந்த விடயமும் அதில் பேசப்படவில்லை. ஏனெனில் நாங்கள் இன்று வரை 10 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட பொதுமக்களின் காணிகளை விடுவித்துள்ளோம்.

எங்களால் விடுவிக்கப்படக் கூடிய அனைத்து இடங்களையும் இன்றுவரை விடுவித்துள்ளோம். எனினும் எதிர்காலத்தில் பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் நாம் ஆராய்ந்து வருகின்றோம். எனினும் தற்போதைய நிலைமையில் காணி விடுவிப்பு தொடர்பில் எந்த விதமான முடிவும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (ம-3)

தபால் நிலையம்...

துள்ளார்.

நேற்று நடை பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

தபால் தொழிற்சங்க ஊழியர்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ம-3)

021 222 6666...

குள் கொண்டு வரப்பட்டுள்ளது. பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் மத்தியிலேயே புதிய நோயாளர்கள் இனங் காணப்படுகின்றனர்.

இதேவேளை இந்தியாவில் தற்பொழுது கொரோனா நோயின் பரம்பல் மிகத் தீவிரமாக அதிகரித்துள்ளது. அத்துடன் இந் நோய் காரணமான இறப்புக்களும் அதிகரித்து வருகின்றது.

இந்த சூழ்நிலையில் இந்தியாவிலிருந்து இரகசியமாக மீன்பிடிப்படகுகள் மூலம் தமிழ்நாட்டிலிருந்து சிலர் இங்கு வருகை தரலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இவரகளால் இலங்கையில் கொரோனா தொற்று ஏற்படுவதற்கான அபாயம் உள்ளது.

அவ்வாறு எமது நாட்டிற்குள் வருகை தருபவர்களை சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி பரிசோதனைக்கு உட்படுத்துவதன் மூலம் எமது நாட்டில் இந்நோய் பரவுவதை தடுக்கக் கூடியதாக இருக்கும்.

எனவே, இவ்வாறு யாராவது இரகசியமான முறையில் இந்தியாவிலிருந்து உங்கள் பிரதேசத்திற்கு புதிதாக வருகை தந்திருந்தால் அவர்கள் பற்றிய தகவல்களை உடனடியாக உங்கள் பிரதேசத்திற் குரிய கிராம சேவையாளர், சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர் ஆகியோருக்கு அறியத் தரவும்.

அல்லது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் 24 மணி நேர அவசர அழைப்பெண் 021222 6666 என்ற இலக்கத்திற்கு அறியத் தரவும் (ம-3)

நயினை தாய்க்கு...

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூஷணி அம்மனின் வருடாந்த பெருந் திருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

யூலை மாதம் 3ஆம் திகதி வெள்ளிக் கிழமை தேர்த்திருவிழாவும் 4ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சம் காரணமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ள அடியவர்களுடன் ஆலய திருவிழா நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

தமிழர்களுக்...

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான புதிய அரசில் தமிழ் மக்களுக்கான தீர்வு எத்தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படாத விதத்தில் வழங்கப்படும் என்று மகிந்த அணியினர் தெரிவித்து வரும் கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் மனதை வென்றவர்கள் நாம். அவர்களும் எம்மை முழுமையாக நம்பினார்கள். அதனால் நல்லாட்சியில் அரசியல் தீர்வைத் தவிர தமிழர்களின் ஏனைய பிரச்சினைகளுக்கு எம்மாலான தீர்வுகளை வழங்கினோம்.

நல்லாட்சியில் புதிய அரசமைப்புப் பணிகளையும் முன்னெடுத்தோம். ஆனால், அன்று எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்த ராஜபக்ஷ அணியினர் அதனைக் குழப்பியடித்துவிட்டனர். பாராளுமன்றத்துக்கு உள்ளும் வெளியிலும் அவர்கள் இனவாதக் கருத்துக்களைத் தெரிவித்து பௌத்த தேரர்களையும் சிங்கள மக்களையும் எமக்கு எதிராகத் திசை திருப்பினர்.

அதையடுத்தே புதிய அரசமைப்புக்கான பணிகளை இடைநிறுத்தினோம். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் தமிழ் மக்களுக்கும் வெளிப்படையாகத் தெரிந்த விடயம்.

இவ்வாறான குழப்ப நடவடிக்கைகளில் ஈடுபட்ட ராஜபக்ஷ தரப்பினர் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் அரசியல் தீர்வு வழங்க முன்வரமாட்டார்கள். இதை உணர்ந்துதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தமிழ் மக்களும் ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை நிராகரித்தார்கள்.

ஜக்கிய தேசியக் கட்சி தனியாட்சி அமைத்தால் மாத்திரமே தமிழர்களுக்கான தீர்வு சாத்தியப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

வடக்கின் பாது...

பணியகத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு படைத் தலைமையக தளபதிகள், பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் தற்போதைய பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து ஆராயப்பட்டதுடன், புதிதாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போதைய பாதுகாப்பு நிலைவரங்கள், கொரோனா தாக்கங்கள், சட்டம் ஒழுங்கை பேணுதல், அமைதி மற்றும் நல்லிணக்கம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனை, கொள்ளைகள், குற்றங்கள், நல்லிணக்க செயற்பாடுகளில் உள்ள தடைகள், சமூக பொலிஸ் பங்கு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ம-3)

யஸ்மின் சூக்கா...

ஐ.டி.ஜே.பி அமைப்பு ஆகியன தன்னை அவதூறு செய்வதாக சுரேஷ் சாலே எழுதிய கடிதத்தை, அவரது சட்டத்தரணிகள் குழுவொன்று சமர்ப்பித்துள்ளது.

"இலங்கையில் நல்லிணக்கத்திற்கு உதவுவதற்காக சூக்கா மற்றும் ஐ.டி.ஜே.பிக்கு, ஐ.நா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை சேர்ந்த பல்வேறு அறக்கட்டளைகள் மற்றும் பிற அமைப்புகளிடமிருந்து நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனாலும், சூக்கா மற்றும் ஐ.டி.ஜே.பி ஆகியவை அந்த நிதியுதவியின் நோக்கத்திற்கு முரணாக நடக்கிறார்கள். இந்த நிதிகள் விடுதலைப் புலிகளில் அனுதாபம்கொண்ட நிறுவனங்களின் நிகழ்ச்சி நிரல்களை மேலும் மேம்படுத்துவதற்கும் சமூகங்களிடையே மோதலை ஏற்படுத்தவும் பயன்பட்டதாக தெரிகிறது" என சாலியின் சட்டத்தரணியொருவர் தெரிவித்துள்ளார். (ம-3)

மக்களுக்கான...

வெளியிட்டு பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தினால் மாகாண சபை தேர்தலை நடத்தாமல் இருந்தது போல் இம்முறையும் பொதுத் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு முயற்சி செய்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். இருப்பினும் அதற்கு உயர் நீதிமன்றம் இடமளிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

இலங்கையின் பாராளுமன்ற தேர்தலுக்கு கண்காணிப்பு குழுவை அனுப்ப முடியாது!

ஐரோப்பிய ஒன்றியம் அறிவிப்பு

(ஜெனிவா)

இலங்கையின் பொதுத்தேர்தலுக்கு முழுமையான கண்காணிப்புக் குழுவை அனுப்ப முடியாது என்று ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அதில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சுகாதாரம் மற்றும் அமைவிடம் போன்ற பிரச்சினைகளின் அடிப்படையில் தமது முழுமைக் கண்காணிப்புக்குழுவை அனுப்ப் முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பதிலாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் நிபுணர் அலுவலகத்தின் இரண்டு மூன்று உறுப்பினர்களை தேர்தல் பணிகளில் ஈடுபடுத்த முடியும் என்று ஒன்றியம் தெரிவித்துள்ளது.

எனினும் அது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது ஐரோப்பிய ஒன்றியம் 60 பேர் கண்காணிப்புக்குழுவை இலங்கைக்கு அனுப்பியிருந்தது. இதேவேளை பொதுநலவாய அமைப்பும் இலங்கையின் தேர்தலின்போது கண் காணிப்புக்குழுவை அனுப்பாது. எனினும் ஆசியான் அமைப்பு தாம் குழு ஒன்றை அனுப்புவதாக தெரிவித்துள்ளது. (ம-3)

2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை பணத்திற்காக இந்தியாவிற்கு விற்றோம்

முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த தெரிவிப்பு

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இந்தியாவுடனான இறுதிப் போட்டியில், பணத்திற்காக கிண்ணத்தை தாரைவார்த்ததாக முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனான இறுதிப் போட்டியில் கிண்ணத்தை வெற்றிகொள்வதற்கான தகுதி இலங்கை அணியிடம் காணப்பட்ட போதிலும், பணத்திற்காக அது தாரைவார்க்கப் பட்டதை தாம் பொறுப்புடன் கூறுவதாகவும் மகிந்தானந்த அளுத்கமகே கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் விவாதத்தில் ஈடுபடவும் தாம் தயாராகவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் வீரர்களை இணைத்துக் கொள்ளவில்லை எனவும் ஒருசில தரப்பினரால் இந்த விடயம் மேற்கொள்ளப்பட்டதாகவும் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே இதன் போது குறிப்பிட்டுள்ளார். (ம-3)

பிரத்தியேக வகுப்புக்கள்

தமிழ் வகுப்புக்கள் Gr 6 - 11 வரை வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். வரலாறு, புவியியல், குடியுரிமை பாடங்களும் கற்பிக்கப்படும்.

ஆசிரியர் :- K.குகன்

076 454 5709

(3055)

காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

(3059)

கொழும்பு இந்து மகளிர் கல்லூரி ஆசிரியரினால் யாழ். மாணவர்களுக்கு Physics (Zoom) வகுப்புகள்

New Subjects going to start

A/L 2022

Mechanics
Batch 1- Sat 11 a.m - 1 p.m
Batch 2 - Sun 8.15 p.m - 10.15 p.m

Instruments
Batch 1 - Wed 6 p.m - 8 p.m
Batch 2 - Thurs 11 a.m - 1 p.m

A/L 2021/2020

Hydro statics - Mon 6 p.m - 8.30 p.m
Paper revision - Tues 6 p.m - 8.30 p.m
Fields - Thurs 6 p.m - 8.30 p.m
Thermodynamics - Sat 6 p.m - 8.30 p.m

(3054)

This Week Revision Exam – 'Sound'

A.Jenukananth
B.Sc. Engineering (Hons)
(மொறட்டுவ பல்கலைக்கழகம்)
T.P : 076 546 3054

31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி, சபிண்டீகரண நிகழ்வுகள்

மலர்வு 27.01.1940 உதிர்வு 20.05.2020

அமரர் மங்கையர்க்கரசி கார்த்திகேசு

(19.06.2020 வெள்ளிக்கிழமை)

27.01.1940ல் பழவத்தை, வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்ப விளக்கு அமரர் மங்கையர்க்கரசி கார்த்திகேசு அவர்கள் 20.05.2020ல் கனடாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான பெர்.கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் வி.க.முருகுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் தபால் அதிபர் கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் மற்றும் தங்கவேலு, தெய்வநாயகி ஆகியோரின் பிரியமான சகோதரியும், காலஞ்சென்றவர்களான மதியழகன், மனோகரன் மற்றும் இளங்கோ, சோதிமதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், மதியழகன் ஜெயலட்சுமி, இளங்கோ - தாரணி, தியாகராசா சிவாசன் ஆகியோரின் மாமியாரும், அமலன், திருமதி அஞ்சலி - மயூரன், ஆஷா, கெவின், நிவேதா, ரஜீவ், அஜீத், திறிஷா ஆகியோரின் ஆசைப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகள் இன்று (2020.06.19) கனடாவில் நடைபெறும். ஆத்மா இறையடியில் சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

அருணோதயம்
நாவலடி, புலோலி மத்தி,
பருத்தித்துறை.

பழவத்தை,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை. (C-9727)

தகவல் :
குடும்பத்தினர்

பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரப் பகுதியில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு

றொட்டி வேலை ●
கொத்து வேலை ●
பிறைட் றைஸ் ●

தயாரிக்கத் தெரிந்த **பணியாளர் தேவை.**

தகுதியுடையோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நேரில் வருகை தரவும்

(C-9722)

T.P
077 649 1027

மீண்டும்

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

(C-9685)

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் **100%** பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

ஆயுர்வேத வைத்தியர் தேவை

ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றில் யாழ்.நகரில் பணியாற்றுவதற்கு ஆயுர்வேத பெண் வைத்தியர் உடன் தேவை.
(புதிதாக பட்டம் பெற்றவர்கள் விரும்பத்தக்கது) (C-9715)

077 912 8944

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

வழமை போல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● கன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-9624)

0768226240

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது